# சரியான ஆரம்பம்

## பிள்ளைநேய அபிவிருத்தி நிலையங்களுக்கான வழிகாட்டல்கள்

# உள்ளடக்கம்


1. **அறிமுகம்…………………………………………………………………04**

2. **பிள்ளைநேய அபிவிருத்தி நிலைய எண்ணக்கருக்களும் கோட்பாடுகளும்…...06**
   2.1 அறிமுகம்………………………………………………………………….06
   2.2 ‘அபிவிருத்தியின்’ முக்கிய சிறப்பியல்புகள்………………………………….06
   2.3 ‘பிள்ளைநேயம்’ என்பதனால் பொருள்படுவது என்ன……………………...07

3. **குறைந்தபட்ச நியமங்கள் பற்றிய எண்ணக்கருக்கள்…………………...……09**
   3.1 பிள்ளை நேய அபிவிருத்தி நிலையங்களுக்கான குறைந்தபட்ச நியமங்களும் தேவைகளும்……………………………………………………09
   3.2 கற்றலும் உளவியல்-சமூகச் சூழலும்………………………………………11
   3.3 நிர்வாக நியமங்கள்………………………………………………………….13
   3.4 சமயப் பின்னணி……………………………………………………..…14
   3.5 விசேட தேவைகளையுடைய பிள்ளைகளின் சுகாதாரத்தைப் பரிசோதித்தலும் இனங்காணலும்……………………………………………………………14
   3.6 பணியாளர்………………………………………………………………14

4. **பிள்ளை அபிவிருத்தி நிலையங்களில் பெற்றார் பங்குபற்றல்……………………15**
   4.1 நோக்கங்களும் குறிக்கோள்களும்…………………………………………..15
   4.2 பிள்ளை அபிவிருத்தி நிலையங்களில்ஆர்வத்துடன் பங்குபற்றுவதற்காக பெற்றார் தெரிந்து கொள்ள வேண்டியவை………………………………15

5. **பிள்ளை அபிவிருத்தி நிலையப் பயிற்சிக்கான நியமங்களும் தேவைகளும்……18**
   5.1 பிள்ளை அபிவிருத்தி நிலைய ஆசிரியர் பயிற்சி அனுமதித்தேவைகள்........18
   5.2 வாண்மைத்துவ பயிற்சிப் பாகத்தின் புறவரை…………………………... 18

6. **பிள்ளைநேய பிள்ளை அபிவிருத்தி நிலைய எண்ணக்கரு……………………19**
   6.1 5 வயது வரையான வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியின் மைல் கற்கள்……19
   6.2 ஆபத்துக்கு உள்ளாகக்கூடிய பிள்ளைகளை நேர காலத்துடன் இனங்காணல்……………………………………………………………...19
   6.3 பிள்ளை அபிவிருத்தி நிலையப் பிள்ளைகளின் வளர்ச்சி மற்றும் போசாக்குத் தன்மையைக் கண்காணித்தலின் முக்கியத்துவம்…………………………..19
   6.4 பிள்ளைப் பராமரிப்பு நடைமுறைகள் தொடர்பாகப் பெற்றார் அறியச் செய்தல்………………………………………………………………...19
   6.5 உளவியல், உள ஆற்றல்,அறிவாற்றல், உளவியற் சமூக, மொழியாற்றல், அழகுணர்வு போன்ற அனைத்துப் பகுதிகளினதும் அதிகபட்ச அபிவிருத்திக் குப் பங்களிக்கும் விதத்தில் வயதுக்கேற்ற கற்றல் அனுபவங்களை ஒழுங்கமைத்தல்…………………………………………………………..19
   6.6 பிள்ளை அபிவிருத்தி நிலையங்களுக்கான குறைந்தபட்ச நியமங்கள்…....20
   6.7 பிள்ளை அபிவிருத்தி நிலைய முகாமைத்துவம்…………………………....20

**7. பிள்ளை அபிவிருத்தி நிலையங்களைப் பதிவு செய்வதற்கான செவ்வை பார்த்தல் பட்டியல்……………………………………………...……21**

7.1 பௌதிகச் சுற்றாடலும் வசதிகளும்……………………………………………21

7.2 சுகாதாரப் பராமரிப்பும் போசாக்கும்……………………………………………22

7.3 கற்றல் மற்றும் உளவியற் சமூக சுற்றாடல்………………………………...22

7.4 நிர்வாக நியமங்கள்…………………………………………………….....23

7.5 சமயச் சுற்றாடல்……………………………………………………………..24

7.6 பணியாளர் தேவைகள்…………………………………………………24

7.7 பெற்றார் மற்றும் நிர்வாக ஒத்துழைப்பு……………………………………...24

7.8 வேலைத் திட்டம்……………………………………………………………..24

**பிள்ளைநேய அபிவிருத்தி நிலைய – தொழிற்பாட்டுக் கட்டமைப்பு……......................25**

**பிள்ளைப் பராமரிப்பு…………………………………………………………………..25**

# 1. அறிமுகம்

ஒரு பிள்ளையின் வாழ்க்கையின் முதல் ஐந்து வருடங்களும் அதன் மூளை விருத்தியில் இக்கட்டானவை. இக்காலமானது துரிதமாக விருத்தியடையும் மூளை வளர்ச்சிக்கு இக் கட்டமான பருவம் மாத்திரமல்லாது இக்கால கட்டத்தில் மூளை வளர்ச்சி வெளிக் காரணி களின் தாக்கங்களுக்கு உட்படுவதால் அதன் அறிவாற்றல் தொழிற்பாட்டின் தரத்தையும் நிர்ணயிக்கின்றது. மொழியின் விருத்தி, சமூகமயமாதல் மற்றும் ஆளுமை விருத்தி போன்றவற்றின் முக்கியமான மைல் கற்களை அடைவதில் 3–5 ஆண்டுகள் முக்கியத்துவம் வகிக்கின்றன. பிறப்பின் போதே ஒப்பீட்டளவில் மனித மூளை முதிர்ச்சியடைந்திராது.ஞாபக சக்தி, கற்றல், தசையின் இயல்பான கட்டுப்பாடு மற்றும் ஏனைய அறிவாற்றல் நடத்தை முதலியவற்றுடன் பெரிதும் தொடர்பு கொண்டுள்ள மூளையின் மேற்பட்டையே பெருமளவில் முதிர்ச்சியடையாத பகுதியாகும்.அனுபவங்களே பிள்ளையின் மூளையைச் செயற்படுத்துவதுடன், அவையே அவற்றின் வழிப் பாதைகளைக் (நரம்புகளின் நியூட்ரன் முனைகள்)கட்டியெழுப்புகின்றன. 3 – 5 வயதுக்கு இடைப்பட்ட காலங்களின் போது கிடைக்கும் சரியான தூண்டல்களும் அனுபவங்களும் சம்பந்தப்படும் வழிப்பாதைகளை நிரந்தரமாக ஆக்குவதுடன் பிள்ளையை வாழ்நாள் முழுவதிலும் கற்போனாக மாற்றச் செய்கிறது.ஆயினும், வழிப்பாதைகள் பயன்படுத்தப்படாவிடின், அவை முறையாக விருத்தி யடையாதிருப்பதுடன் பிள்ளை பாடசாலைக்கு நுழையும் தருணத்தில் கற்றலுக்கான ஆயத்த நிலையை அடையாது பின்தள்ளப்பட்ட அடையாளங்களை வெளிப்படுத்தும் நிலைமைக்கும் ஆளாகும்.

சாத்தியமாக்கும் சூழலொன்று உருவாவதிலேயே இந்த விருத்திசார் பணியை அடையும் வெற்றி தங்கியுள்ளது. இச் சூழலானது போசாக்கான உணவுகளை வழங்குதல்,முறையான ஆரோக்கியம்,ஆதரவும் பாசமும் கொண்ட இடைத் தொடர்பாடல், உகந்த முன்மாதிரி, ஊக்குவிப்பு மற்றும் அரவணைப்பு உள்ளடங்கிய பாதுகாப்பும் சுகாதாரமும் கொண்ட சுற்றாடலையும் தேகாரோக்கியத்தையுமே கொண்டதாகும்.

முன்பள்ளிகளால் தரப்பட வேண்டும் எனவும், அவற்றினால் வழங்கப்பட வேண்டும் எனவும் எதிர்பார்ப்பதும் இவ்வாறான வலுமிக்க சுற்றாடலையாகும்.பிள்ளையின் தனிப்பட்ட வேறுபாடு களை மதித்தவாறு அதன் தேவைகளுக்கு செவிசாய்த்த வண்ணம் பிள்ளையின் வளர்ச்சிப் பருவத்துக்குப் பொருத்தமான, தரமான பிள்ளைப் பராமரிப்பையும் அது உள்ளடக்குகிறது.

கடந்த இரு தசாப்த காலங்களில் முன்பள்ளிகள் தனிச்சிறப்பு மிக்க வளர்ச்சியைக் கண்டு உள்ளன. 2004 இல் அரசாங்கத்தினால் முன்பள்ளிகள் தொடர்பான தேசிய கொள்கைச் சட்டகம் அங்கீகரிக்கப்பட்டிருப்பினும் கூட இத்துறையில் உள்ள முன்பள்ளி நடாத்துவோர் களின் பலவகைத் தன்மையும் முன்பள்ளிகள் பிள்ளையை வாசிப்பு, எழுத்து, எண் (3R) என்பவைகளைக் கற்பிப்பதன் மூலம் ஆரம்பப் பள்ளிகளுக்கு ஆயத்தம் செய்கின்றன என்ற பிழையான கருத்துக் கோட்பாடுகளும் அவர்கள் வழங்குகின்ற சூழலிலும் அனுபவங்களி லும் பலதரப்பட்ட மாதிரிகளுக்கும் தரங்களில் பரந்தளவான வேறுபாடுகளுக்கும் வழிகாட் டின. இந்நிலையைத் திருத்தியமைக்கும் முதல் நடவடிக்கையாக 2003ம் ஆண்டு UNICEF உம் சிறுவர் செயலகமும் முன்பள்ளிப் பாடசாலைகளின் தேசிய ஆய்வைத் தொடக்கி வைத்தன. இந்த ஆய்வின் ஒட்டுமொத்தமான குறிக்கோள், முன்பள்ளிப்பாடசாலைகளின் பிள்ளைப் பராமரிப்புக்கான ஏற்பாடுகளின் அந்தஸ்தை விளங்கிக் கொள்ளுதலும் அவ் வாறான பராமரிப்பின் இயல்பையும் தரத்தையும் கணிப்பீடு செய்வதுமாகும்.

இந்த ஆய்விலிருந்து கண்டறியப்பட்டவைகள் பல்வேறு குறைபாடுகளை வெளிப்படுத்தியது மட்டுமன்றி நெறிப்படுத்தி மேம்படுத்தப்பட வேண்டிய பகுதிகளையும் எடுத்துக்காட்டின.

இந்த ஆய்விலிருந்து கண்டறியப்பட்ட பின்வரும் சாராம்சம் இலங்கையில் உள்ள முன் பள்ளிப் பாடசாலை நிலைமைகளின் ஒட்டு மொத்தமான சித்திரத்தைத் தந்தது.

- முன்பள்ளிப் பாடசாலைகள், பல்வேறு வகையான கட்டிடங்களில் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளன. இவற்றுள் அநேகமானவை பொருத்தமற்றவை.
- உள்ளரங்கிலும் வெளியிலும் பொருத்தமான விளையாட்டு மற்றும் கல்விசார் உபகர ணங்களும் குழு மற்றும் தனிப்பட்ட தூண்டல்களுக்குரிய பொருட்களும் போதாமல் இருப்பது மனதைக் குழப்பத்துக்கு உள்ளாக்குகிறது.
- வழங்கப்படுகின்ற வளர்ச்சி மற்றும் விருத்தி சார்ந்த சேவைகளின் வகைகளும் தரமும் போதாதவை. (இவ்வாறான சேவைகளுள் போசாக்கின்மைக்கான கவனமும் விசேட தேவைகளையுடைய பிள்ளைகளுக்கு ஏற்ற கவனமும் உள்ளடங்கும்)

- பிள்ளைகள் எவ்வாறு கற்கின்றனர் என்பது தொடர்பான முன்பள்ளிப் பாடசாலை ஆசிரியர்களின் விழிப்புணர்வு மோசமாக உள்ளது.
- கதை கூறல், சுதந்திரமான விளையாட்டு, செவிமடுத்தல் திறன்கள் மற்றும் முன் எழுத்து, முன் வாசிப்பு மற்றும் முன் எண்கள் தொடர்பான திறன்களின் விருத்திக்கான செயற்பாடுகளுக்கு தரப்பட்டுள்ள முன்னுரிமை போதாது.
- சூழல் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் மிகக் குறைந்தளவான முன்னுரிமையையே அடைந்திருந்தன.
- ஆசிரியர்களால் இயற்கைச் சூழல் பயனளிக்கக் கூடியவாறு பாவிக்கப்படவில்லை.

அத்துடன் முன்பள்ளிகளின் வெளிப்பாடுகள் மற்றும் அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் விளைவுகள் குறித்து அநேகமான பெற்றோர்கள் பல்வேறு தப்பபிப்பிராயங்கள் கொண்டிருந் ததை ஆய்வுகள் வெளிப்படுத்தியிருந்தன. முன்பள்ளிகளில் இருந்து அநேகமான பெற்றார் எதிர்பார்த்தவை எல்லாம் முறைசார்ந்த பாடசாலைக்கான சிறந்த கல்வியையும்/ஆயத்தத் தையும்/பயிற்சியையுமே ஆகும்.முன்பள்ளி வெளிப்பாடு மூன்றாண்டுகளுக்கு அப்பாலிருந்தே பரிந்துரைக்கப்பட்டிருந்தாலும் முறைசார்ந்த பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் முன்பள்ளியுடனான அனுபவங்கள் ஒரு சில மாதகாலத்துக்கு போதுமென்ற கண்ணோட்டத்தையே அநேகமான பெற்றோர்கள் கொண்டிருந்தனர். சிறியளவான 3 – 4 வயதுப் பிள்ளைகளை மாதிரியாகக் கொண்ட எடுகோள்களிலிருந்து இது புலனாகிற்று. அத்துடன் பிள்ளைகளை முன்பள்ளிக்கு அனுப்பவேண்டிய தேவை அனாவசியம் என்ப தைக் கருத்தில் கொண்ட சிலரும் இங்கு இருந்தனர்.

திட்டமிடப்பட்ட தலையீட்டுக்கான தேவையை ஆய்வில் கண்டறியப்பட்டவை வலுவாக எடுத் துக் காட்டியிருந்தன.

- தாறுமாறாக முன்பள்ளிகளை விரிவாக்குவதை நெறிப்படுத்தல்
- தரமான பராமரிப்பு ஏற்பாடு செய்யப்படுவதை உறுதி செய்தல்
- ஆசிரியர் பயிற்சியின் தரத்தையும் நியமங்கயையும் நெறிப்படுத்தல்
- பிள்ளையின் விருத்தித் தேவைகள் பற்றிய பெற்றோரின் விழிப்புணர்வை அதிகரித்தல்
- முன்பள்ளிகளை முகாமைத்துவம் செய்வதில் பெற்றோரின் ஒத்துழைப்பையும் பங்குபற்றலையும் பெற்றுக் கொள்ளல்.

மிகச் சொற்பமான ஊக்குவிப்புக் கொடுப்பனவு இருந்த போதிலும் பெரும்பாலான முன் பள்ளி ஆசிரியர்கள் அப்பழுக்கற்ற ஊக்கலையும் வாண்மைத்துவத்துக்கான அர்ப்பணிப்பை யும் தொழில் திருப்தியையும் கொண்டுள்ளனர் என்பதை இந்த ஆய்வு மேலும் எடுத்துக் காட்டியது. ஆய்வு செய்யப்பட்ட ஆசிரியர்களுள் 63% வீதமானோர் ஐந்து வருடங்களுக்கு மேலாகவும் அவர்களுள் அநேகமானோர் இவ்வாறான நிலைமைகளின் கீழ் 10 ஆண்டு களுக்கும் வேலை செய்துள்ளனர். இவர்கள் அனைவரும் மேலதிக பயிற்சியை வேண்டினர். பெற்றோர்களில் பெரும்பாலானோர் தமது பிள்ளைகளின் முன்பள்ளிகளுக்கு ஒத்துழைப் பாகவும் தமக்கு இயலுமான விதத்தில் தேவைகள் ஏற்படும் போது முன்பள்ளிகளுக்கு உதவுவதில் உற்சாகமாக இருப்பதையும் காணக்கூடியதாக இருந்தது.

முன்பள்ளிகளை நடத்துவோர், ஆசிரியர்கள், நிர்வாகிகள், ஆய்வாளர்கள்,ஆலோசகர்கள், தேசிய மற்றும் மாகாண மட்ட அரச அதிகாரிகள், பல்கலைக்கழகங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் முன்பள்ளிக் கல்வியில் இத்துறையைச் சார்ந்த தனிப்பட்டவர்களைச் சம்பந்தப்படுத்தி 2006ம் ஆண்டு முதன் முறையாக நடாத்தப்பட்ட கூட்டங்கள் மற்றும் கலந்தாலோசனை தொடர்களின் விளைவுகளே இந்த ஆவணத்தில் முன்வைக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களாகும். வழிகாட்டல்களைத் தயாரிக்கும் செய்முறையில் சிறுவர் செயலகமும் UNICEF நிறுவனமும் வழிநடாத்தின.

இந்த வழிகாட்டல்கள் முன்பள்ளிகளைப் பிள்ளை நேய விருத்தி நிலையங்களாக மாற்றி யமைப்பதில் உங்களுக்கு வழிகாட்டி உதவும் நோக்கத்தைக் கொண்டன. மூன்றிலிருந்து ஐந்து வயதுவரையான பிள்ளைகளுக்கான நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து அமுலாக்கும் பொருட்டு இன்றியமையாத கூறுகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே, பிரிவுகளாக இந்த வழிகாட்டல்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

## 2. பிள்ளைநேய அபிவிருத்தி நிலைய எண்ணக்கருக்களும் கோட்பாடுகளும்

### 2.1 அறிமுகம்

முன்பள்ளிப் பாடசாலைகளை பிள்ளை நேய அபிவிருத்தி நிலையங்களாக மாற்றி யமைக்கும் வழிகாட்டிகளுக்குத் தேவையான கோட்பாடுகளை இங்கு முன்வைக்கப்பட்டு உள்ள எண்ணக்கருப் பகுப்பாய்வு வெளிக்கொணருகிறது. பௌதிக வசதிகள், பாட விதான உள்ளடக்கம், கற்றல் அனுபவங்களை ஒழுங்கமைத்தல், ஏற்பாடு செய்யப்பட வேண்டிய சேவைகள், உளவியல்-சமூக சுற்றாடல், முகாமைத்துவம், பெற்றாரின் பங்கு பற்றல் மற்றும் ஆசிரியர் பயிற்சி போன்ற அபிவிருத்தி நிலைய நிகழ்ச்சித் திட்டத்தின் வித்தியாசமான பாகக் கூறுகளுக்கான வழிகாட்டிகளை இத்தகைய கோட்பாடுகள் நோக்கங்களாகவும் குறிக்கோள்களாகவும் மாற்றியமைக்கின்றன.

### 2.2 ‘அபிவிருத்தியின்’ முக்கிய சிறப்பியல்புகள்

- பிள்ளை அபிவிருத்தி எனப்படுவது மாற்றத்தின் படிப்படியான செய்முறையாகும் இதன் மூலம் நகர்தல், சிந்தித்தல், உணர்தல் மற்றும் பிறருடன் தொடர்பு கொள்ளல் போன்ற பல்வேறு சிக்கலான மட்டங்களைக் கையாள பிள்ளை கற்கிறது.
- விருத்திச் செய்முறையானது,வளர்ச்சி,போசாக்கு மற்றும் கற்றல் முதலியவற்றை உள்ளடக்குகிறது
- பிள்ளை விருத்தியானது :
  - இடைத் தொடர்பாட்டின் மூலம் நிகழுகிறது
  - தொடர்ச்சியாக நிகழுகிறது.
  - அதற்கென ஒரு பாங்கு உண்டு
  - அதற்குப் பல பரிமாணங்கள் உண்டு
- உடலியல், உள - இயக்க, அறிவுசார்ந்த, மொழி, மனவெழுச்சி மற்றும் சமூகத் திறன்கள் போன்ற அபிவிருத்தியின் வித்தியாசமான அம்சங்கள் இடைத் தொடர்பு உடையவை, இடைத் தாக்கம் புரிபவை ஒன்றிலொன்று தங்கியிருப்பவை.
- எனவே, பிள்ளை அபிவிருத்தி நிலையங்கள்,முழுமையான மற்றும் ஒன்றிணைந்த அணுகுமுறையை அவசியம் கையாண்டு கல்வி மற்றும் பராமரிப்பு ஆகிய இரு பகுதிக்கும் கவனம் செலுத்த வேண்டும்.
- நிலையமானது, பிள்ளை வளரக்கூடிய பாதுகாப்பான சூழலை அடைந்துகொள் ளல் வேண்டும். இச்சூழலிலேயே பிள்ளை வித்தியாசமான கருத்து வெளிப்பாட் டின் மூலம் அடையத் தேவையான தகவல் மற்றும் மாறுந்தன்மைக்கு இன்றி யமையாத அதிகரித்துவரும் சிக்கலான திறன்களில் முதிர்ந்து தேர்ச்சியடைய வேண்டும்.
- உடலியல் மாற்றங்களை அடிப்படையாகக் கருதும் வளர்ச்சி பெரும்பாலும் மர பணுக் குறியீட்டினால் தீர்மானிக்கப்படும் நிலையான தொடரினாலேயே இடம் பெறுகிறது.
- நடத்தையின் ஒழுங்கான மாற்றங்களுக்கு முதிர்ச்சியானது வழிவகுக்கிறது. இருப்பினும் சூழலின் செல்வாக்குக்கு அமைய இது பெரும்பாலும் மரபணு ரீதி யாக ஒழுங்கமைக்கப்படுகிறது.
- அனுபவம், பயிற்சி அல்லது சூழலின் செல்வாக்கின் விளைவாகவே நிகழும் திருத்தமே கற்றலாகும்.
- எப்படிப்பட்ட நேரமாயினும் கற்றல் செய்முறையின் இயல்பை பெரிதும் தீர்மானிப் பது வளர்ச்சியினதும் போசாக்கினதும் அளவுகளாகும். பிள்ளை ஆயத்தமில்லாத கற்றல்-கற்பித்தல் செய்முறையைக் கையாள்வதனால் அபிவிருத்தியை முன் னெடுத்தல் இயலாத காரியமென்பது இதன் பொருளாகும்.
- அபிவிருத்தி எனப்படுவது முழுமையானது.அத்துடன் அதன் வித்தியாசமான அம்சங்கள் ஒவ்வொன்றுடன் இடைத்தாக்கம் செய்வதுடன் ஒன்று மற்றையதை செல் வாக்குக்கு உட்படுத்துகின்றன. உதாரணமாக ஊட்டக் குறைபாடு உடலியல் விருத்தியை மட்டுமன்றி அறிவுசார் மற்றும் உளவியல் சமூக விருத்தியையும் பாதிப்புக்குள்ளாக்கும்.
- விருத்தி முழுமையாக இருப்பதன் காரணமாக அதன் எல்லா அம்சங்களைப் பொருத்தமட்டில் பிள்ளையிலும் முழுமையாகக் கவனம் செலுத்த வேண்டும்.

இருவேறுபட்ட அணுகுமுறைகளை ஒன்றாக இணைப்பதன் மூலம் ஒன்றிணைவு அடையப் பட வேண்டும்.

1) கற்றல் நிலைமைகள் ஒன்றிணைந்த அணுகுமுறையைக் கடைப்பிடித்தல் வேண்டும்.
2) கற்றல் சூழலானது பராமரிப்பு மற்றும் கல்வி ஆகிய இரு விடயங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

உகந்த அளவிலான வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பராமரிப்பானது மிகவும் அவசியமான தாக இருப்பதனால், அதனைப் பொருத்தமட்டில், பராமரிப்பை வழங்குவோர், மிகவும் விழிப் புடனும் இரக்கத்துடனும் வளர்ச்சியையும் விருத்தியையும் முன்னெடுப்புச் செய்ய தமது நேரத்தையும் வளங்களையும் பயன்படுத்தல் வேண்டும்.

இதனை மிகவும் தெளிவாகக் கூறுவதானால், பிள்ளை தனக்கு போசாக்குள்ள உணவைப் பெற்றுக் கொள்ளும்; தடுப்பூசிகளையும் முறையான சுகாதாரப் பராமரிப்பையும் பெறும்; சுத்தமான குடிநீர் மற்றும் முறையான ஆரோக்கிய நிலைமைகளுக்கான அணுகுதலைக் கொள்ளும்; பாதுகாப்பான சூழலை அடையும்; அன்பு செலுத்தும் மற்றும் உணர்ந்து செயல் படும்; மூத்தோருடன் ஊக்கமான இடைத்தொடர்பை வழங்கும்.

## 2.3 ‘பிள்ளைநேயம்’ என்பதனால் பொருள்படுவது என்ன ?

- பிள்ளைகளின் ஆற்றல்களுக்கும் இயலாமைகளுக்கும் இரக்கமாகவும், பாசத்துடனும், அன்பாகவும், தூண்டுதல் அளிப்பதாகவும்,பரிவுடனும் மாற்றியமைக்கத் தக்கதாகவும் உள்ள பராமரிப்பை மாறாத்தன்மையும் தொடர்ச்சியும் கொண்ட சூழலை வழங்கு வதாகும்.
- தனிப்பட்ட ரீதியிலும் ஒத்துழைக்கும் குழுநிலைச் சூழலிலும் பிள்ளைகளுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக வழிகாட்டலையும் தூண்டலையும் வழங்குவதாகும்.
- பிள்ளைப் பருவத்துக்கேயுரிய பண்புகளைக்கொண்ட செயற்பாடுகளின் வடிவங்களை பயன்படுத்துவதாகும்.உதாரணமாக–விளையாட்டு, அவதானிப்பு, துருவி ஆராய்தல், முயன்று தவறிக்கற்றல், போலச் செய்தல் போன்ற கற்றல் அனுபவங்களை வழங்கு கையில் பயன்படுத்தும் முறையியலாகும் அதே நேரம்,பிள்ளையின் சுபாவம், உடல் மற்றும் உளம் சார்ந்த ஆற்றல்களையும் ஆர்வங்களையும் அலட்சியம் செய்யாது இருப்பதாகும்.
- தோற்றுகின்ற சிந்தனைக் கோலங்களுக்கும், உடலியல் மற்றும் உள – சமூக நடத் தைகளுக்கும் சவாலாக அமையும் செயற்பாடுகளுக்கு அது பிள்ளையை அறிமுகஞ் செய்யும்.
- அது தனிப்பட்ட ஆற்றல்கள் மேலெழுந்து வர வசதியேற்படுத்துகின்றது.
- பாதுகாப்பான மற்றும் துப்புறவான சூழலுக்காக நிலையத்தில் குறைந்தபட்ச நியமங் கள் இருத்தல் வேண்டும்.
  - பிள்ளையின் செயற்பாடுகளுக்காக பாதுகாப்பான பிரதேசம்/அறை
  - போதுமானளவு பாதுகாப்பான குடிநீர்
  - போதுமானளவு ஆரோக்கிய வசதிகள்
  - நல்ல காற்றோட்டமுள்ள அறைகள்
  - ஆபத்தான சூழலிலிருந்து பாதுகாப்பான தூரம் மற்றும்
  - பாதுகாப்பானதும் துப்புறவானதுமான சூழல் வழங்கப்படல்
- பிள்ளையின் ஒட்டுமொத்தமான தேவைகள் தொடர்பாக பின்வரும் விடயங்களில் நிலையமானது பரிவுடன் நோக்குதல் வேண்டும் :
  - சுகாதாரச் சேவைகள்
  - சௌக்கிய மற்றும் ஆரோக்கியம்
  - சமூகமயமாக்கல்
  - ஆன்மீகத் தேவைகள் மற்றும்
  - மாற்றுத் திறன்கள் கொண்ட பிள்ளைகளுடன் பரிவுடன் நடந்து கொள்ளல்ஸ்ரீ
- பிள்ளைகளது பெற்றாரின் செயல்ரீதியான மற்றும் ஈடுபாடுகளினால் நிலையம் பலன் பெற வேண்டும். நிலையங்களின் தொழிற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத்திலும் அவர்கள் ஈடுபடுதல் வேண்டும்.

பிள்ளை நேய சுற்றாடலின் முக்கிய அம்சங்களை மட்டும் இப்புறவரைக் குறிப்புகளை மட்டுமன்றி கற்றல் அனுபவங்களை வழங்கும்போது மாற்றியமைக்கப்பட வேண்டிய முறையியலையும் எடுத்துக் காட்டுகின்றன. எவ்வாறாயினும் கல்விசார் செய்முறையின் மையம் பிள்ளையாகவே இருத்தல் வேண்டும். பிள்ளையின் சுபாவத்துடன் ஒத்திசைந்து போகாத உபகரணம், கற்றல் அல்லது வேறேதாவதாக இருப்பினும் அவை அனைத்துமே எதிர்பார்க்கும் விளைவினைத் தராது.

உண்மையிலேயே எமது விருத்தி நிலையங்களில்/முன்பள்ளிகளில் வழக்கமாக நடைபெறுவது யாதெனில்,வாசிப்பு, எழுத்து, எண் (3R) என்பவைகளையும் சலிப்பூட்டும் சராசரி செயற்பாடுகளிலேயே பிள்ளைகள் நிலைக்கப்படுகின்றனர் இவைகளே பெற்றார் மட்டுமன்றி ஆசிரியர்கள் கூட விருப்பம் கொண்டுள்ளவையாகும். ஏனெனில் இவை முன்பள்ளிப் பாடசாலைகளின் பயனுறுதியெனக் கூறப்படுபவனவற்றுக்கு தெளிவாகத் தெரியக்கூடிய சான்றுகளை வழங்குவதாகவும் உள்ளன. ஆனால் இளஞ் சிறாரின் தேவைகள் வயது வந்தவர்களைப் போன்றவை அல்ல. செயற்பாடுகள் பிள்ளையின் கவனத்தை ஈர்ப்பனவாக அமைதல் வேண்டும். அவை தோற்றுகின்ற அறிவுசார், சமூக மற்றும் மனவெழுச்சிச் செய்முறைகளையும் ஒட்டுமொத்தமான விருத்திக்கு வழிவகுக்கும் திறன்களையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

ஆசிரியர்களால் திட்டமிடப்படும் பெரும்பாலான விளையாட்டு அனுபவங்கள் மூடிய தன்மையைக் கொண்டவை. அவை ஏதேனும் எண்ணக்கரு அல்லது செயற்பாட்டை அறிமுகப்படுத்துவதுடன் முடிந்து விடுகின்றன. பிள்ளையின் சிந்தனை அத்தகைய சட்டகத்துக்குள் மட்டுமே தொழிற்படுகிறது. ஒவ்வொரு பிள்ளைக்கும் துருவி ஆராய்வதற்கு, கற்றவற்றைப் பிரயோகிப்பதற்கு, தனது தோற்றுகின்ற ஆற்றல்களை மீளச் செய்யவும் மேம்படுத்தவும் கூடிய வாய்ப்புக்களை இயல்பாகவே செய்கின்ற விளையாட்டுக்களை திறந்ததன்மை கொண்டவை வழங்குகின்றன. செயற்பாடொன்றைச் செயலாற்றும் செய்முறையின் போதே இத்தகைய ஆற்றல்களை பிள்ளை தானாகவே கண்டறிகிறது. இவ்வாறான ஆற்றல்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளே உகந்த மட்டத்திலான விருத்திக்கு வலிகோலுவதுடன் தனிப்பட்ட திறமைகள் மேலே கொண்டுவரப்பட இடமளிக்கவும் செய்கிறது

## 3. குறைந்தபட்ச நியமங்கள் பற்றிய எண்ணக்கருக்கள்

3.1 பிள்ளைநேய அபிவிருத்தி நிலையங்களுக்கான குறைந்தபட்ச நியமங் களும் தேவைகளும்

**I. அமைவிடம்**

- பிள்ளை அபிவிருத்தி நிலையங்களுக்காகத் தெரிவு செய்யப்படும் இடங்கள் மலைச் சரிவுகள், மற்றும் மதுபானசாலை,சினிமா தியேட்டர்கள்,வீடியோக் கடைகள்,இறுதிச்சடங்கு மண்டபங்கள்,வாராந்த சந்தைகள்,பஸ்நிலையங்கள், மீன் மற்றும் இறைச்சிக்கடைகள்,தொழிற்சாலைகள்,வாகனம் திருத்துமிடங்கள், குப்பை சேகரிப்பு இடங்கள் அல்லதுமின்மாற்றி போன்ற அபாயகரமான இடங்கள் போன்றவற்றுக்கு மிக அருகாமையில் இருத்தல் கூடாது.
- பொதுவாக,இரைச்சல் அதிகமான, ஆபத்தான அல்லது வளி மாசடையும் வாய்ப்புள்ள சூழலில் அமையாதிருப்பதுடன் அடைவதற்கு மிக இலகுவாக இருத்தல் வேண்டும்.
- இடங்கள், சுத்தமாகவும் ஊர்வன போன்றவை வசிப்பிடமாகக் கொள்ளும் பாரிய மரங்களின் அடிப்புதர்கள் இல்லாதவாறு துப்புறவாகவும் தட்டையாகவும் இருத்தல் வேண்டும்.
- நகரம், சிறு நகரம் அல்லது கிராமம் போன்ற எவ்வாறான அமைவிடமானாலும் இடத்தைச் சுற்றி மதில் அல்லது வேலி இருப்பதுடன் பிரதான வாயில் நன்கு பாதுகாக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- திறந்த கிணறு, குளங்கள்,ஓடைகள், ஆறுகள், நீர்த் தேக்கங்கள் அல்லது அபாயகரமான சாய்வுகளுக்கு அண்மையில் இடங்கள் அமைதல் கூடாது.
- கட்டிடத்தின் முக்கிய வாயில், பிரதான வீதியை நோக்கியோ அல்லது அதற்கு மிக அண்மையிலோ இருத்தல் கூடாது.
- இடத்தில் நிழல் தரும் மரங்கள், அலங்கார மற்றும் அழகான தாவரங்கள், காய்கறிகள், பழவகைகள் மற்றும் மருத்துவத் தாவரங்கள் இருத்தல் வேண்டும்.
- மணல் மற்றும் நீர் விளையாட்டுப் பகுதிகளும் ஊஞ்சல், ஏறு சட்டங்கள், சறுக்கிச் சாதனங்கள் போன்ற வெளியக விளையாட்டு உபகரணங்களுக்குப் போதுமான இடங்களும் இருத்தல் வேண்டும்.
- உள்ளூர் மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட விளையாட்டுச் சாதனங்கள் இருப்பது பொருத்தமானது.

**II. கட்டிடம்**

கட்டிடமானது,

- விசேட தேவையுடைய பிள்ளைகள் அடைவதற்கு ஏற்றவாறாக இருத்தல் வேண்டும்.
- நிரந்தரமான தளத்தையும் கூரையையும் கொண்டு உறுதியாக கட்டப்பட்டிருப்ப துடன் ஏதேனும் பிரச்சினைகளுக்காக காலத்துக்குக் காலம் பரிசோதிக்கப்பட வேண்டும். உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலப் பொருட்களான கிடுகு, பனை யோலை அல்லது வைக்கோல் போன்றவற்றைக் கொண்டு செய்யப்படலாம்.
- பிள்ளைகள் விளையாடுவதற்கும் கற்பதற்கும் போதுமான நிலப்பரப்பு இருத்தல் வேண்டும். (குறைந்தபட்சம் ஒரு பிள்ளைக்கு 20 சதுர அடி)
- போதுமான அளவு வெளிச்சம், காற்றோட்டம் இருப்பதுடன் கடுமையான காற்று அல்லது மழையிலிருந்து பிள்ளைகளைக் காப்பதற்குரிய ஏற்பாடுகளும் இருத்தல் வேண்டும்.

- கதவுளையும் யன்னல்களையும் கொண்டுள்ள நிலம் முழுச் சுவர்ப் பரப்பின் 1/7 பகுதியாக இருத்தல் வேண்டும்.
- கட்டிடமானது அரைச் சுவர்களைக் கொண்டிருப்பின் அவை தரையிலிருந்து ஆகக் குறைந்தது ஒரு மீற்றர் உயரத்தில் அமைந்திருத்தல் வேண்டும். அத்துடன் வெய் யில், மழை போன்றவற்றிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கான (மூங்கில் தட்டிகள்) ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- பிள்ளைகளின் ஆக்கத் திறன்களை காட்சிப்படுத்துவதற்கான இடவசதி சுவர்களில் இருத்தல் வேண்டும்.
- பதிவேடுகளையும், விளையாட்டுப் பொருட்களையும் பாதுகாக்கப்பட வேண்டிய ஏனைய சாதனங்களையும் களஞ்சியப்படுத்துவதற்கான அறையும் இருத்தல் வேண்டும்.
- உணவு தயாரிப்பதற்கான சமையலறை வசதிகளும் இருத்தல் வேண்டும்.
- சுகவீன அறை/பிள்ளைகள் இளைப்பாறுவதற்கான ஓய்வறை இருத்தல் வேண்டும்.
- காண்பதற்குக் கவர்ச்சிகரமான விதத்தில் சுவர்களில் வர்ணம் தீட்டப்பட்டிருத்தல் வேண்டும்.
- ஆசிரியர்களால் அவதானிக்கப்படுவதை உறுதிசெய்யும் விதமாக குறைந்தபட்ச மாக பிரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

## III. தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுக்கான அடிப்படைத் தேவைகள்

பின்வருவன இருத்தல் வேண்டும்

- பிள்ளைகளுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட மேசைகளும் கதிரைகளும்
  - (மேசையின் உயரம் - நிலத்திலிருந்து 2 அடி உயரத்தில்
  - (கதிரையின் உயரம்-ஆசனம் வரை 1 அடியும் பின் சாய்வு 1 அடியும்)
  - (இருக்கையின் அளவு –1 ‘ x 1 ‘, கூர் விளிம்புகள் அகற்றப்பட்டிருத்தல்)
- பிள்ளைகள் சுதந்திரமாக வேலைகளில் ஈடுபடத்தக்கவிதத்தில் கரும்பலகை பொருத்தப்பட்டிருத்தல்
- ஆசிரியருக்கான மேசையும் கதிரையும் (ஒரு ஆசிரியருக்கு ஒன்று வீதம்)
- போதுமானளவு பாய்களும் கனத்த துணிகளும்
- பிள்ளைகளின் வேலைகளைக் காட்சிப்படுத்தும் பலகை
- பிள்ளைகளின் கண்மட்ட அளவில் வைக்கப்படும் கற்றல் பொருட்கள்/ விளையாட்டுச் சாதனங்களுக்கான அடுக்கு அலுமாரிகள்
- அறிவித்தல் பலகை
- வெளியக/உள்ளரங்க விளையாட்டுச் சாதனங்கள், புதிர்கள், சிறுவர் புத்தகங்கள், இசைக்கருவிகள்,கழிவு/குப்பைப் பொருட்கள்(பெட்டியொன்றில் சேகரிக்கப்பட்டவை) போன்றவை, உணவு நேரத்தின் போது மற்றும் / அல்லது உணவு தயாரித்தலின் போதும் நீரைக் களஞ்சியப்படுத்தும்போது பயன்படுத்தும் கோப்பைகள், உணவுத் தட்டுகள், நீர்க் கூசாக்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள்
- பிள்ளைகளின் நீர்ப் போத்தல்களையும் பைகளையும் மேலதிக உடைகளையும் வைப்பதற்கான அடுக்கு அலுமாரிகளும் கொளுவிகளும்.
- பிள்ளைகளால் பயன்படுத்தக்கூடிய சிறிய தும்புத்தடிகள்,ஈக்கில் வாரிகள், குப்பைத் தொட்டிகள், மற்றும் கால் துடைப்பான்கள்
- விசேட தேவைகளையுடைய பிள்ளைகளால் பயன்படுத்தக்கூடிய விளையாட்டு சாதனங்கள்

## Iv. நீரும் ஆரோக்கியமும்

- சுத்தமான குடி நீர் (குழாய் நீர் அல்லது கிணற்று நீர்) கிடைக்கக் கூடிய வசதி களும் இருக்க வேண்டும். அத்துடன் குடிக்கும் நோக்கத்திற்காக கொதித்தாறிய நீரைக் களஞ்சியப்படுத்துவதற்கு(கூசாக்கள் அல்லது குடங்கள்) இருக்கவேண்டும்.
- போதுமானளவு(15 – 20 பிள்ளைகளுக்கு ஒன்று என்ற விகிதத்தில்)சிறுவருக்கே என விசேடமாகக் கட்டப்பட்ட மலசலகூட வசதிகள் கிடைக்கக் கூடியதாக இருக்க வேண்டும். குழாய் நீர் கிடைக்காதவிடத்து நீரைக் களஞ்சியப்படுத்துவதற்கு ஏற்ற

பெரியளவான கொள்கலனும் கைகளைக் கழுவுவதற்குச் சவர்க்காரமும் இருத்தல் வேண்டும்.

- உணவு உண்பதற்கு முன்னரோ அல்லது பிறகோ, வெளியரங்கத்தில் விளை யாடிய பின்னரோ அல்லது மலசலகூடத்தைப் பாவித்த பின்னரோ கைகளைக் கழுவுவதற்காக போதுமானளவு நீருடன் சவர்க்காரமும் வைக்கும் இடம்
- கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கான வழிவகைகளும் துடைப்பான்கள், கழிவுத் தொட்டிகளும் இருத்தல் வேண்டும்.
- விசேட தேவைகளையுடைய பிள்ளைகளுக்கு ஏற்ற நீர் மற்றும் ஆரோக்கிய வசதி கள் இருத்தல் வேண்டும்.

**<u>v. சுகாதாரமும் போசாக்கும்</u>**

- அரையாண்டு மட்டத்தில் வழமையான சுகாதாரப் பரிசோதனைகளும் பெற்றார் கல்விச் செயலமர்வுகளும் ஒழுங்கு செய்யப்படல் வேண்டும்.
- பிள்ளைகளின் வளர்ச்சி வரைபுகளையும் சுகாதாரப் பதிவுகளையும் பேணுகின்ற குடும்பநல சுகாதாரப் பணியாளருடன் பிள்ளை விருத்தி நிலை யம் தொடர்புகளை வைத்திருத்தல் வேண்டும்.
- சராசரிக்கும் குறைந்த வளர்ச்சியைக் கொண்டுள்ள பிள்ளைகள் தொடர்பில் உடனடியாக சம்பந்தப்பட்ட பெற்றாரின் கவனத்துக்கு கொண்டு வருவதுடன் இந்த நிலை தொடருமாயின் மருத்துவ சிபாரிசுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
- போசாக்குள்ள உணவு வேளையொன்றைப் பிள்ளைகள் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இவ்வாறான உணவு வேளை சிறந்த உணவுப் பழக்கங்கள், உணவு வேளைப் பழக்கங்களையும் நடத்தைகளையும் விருத்தி செய்வதற்குப் பொருத்தமானவை என்ற நிபந்தனைகளின் கீழ் வீட்டிலிருந்து கொண்டு வரப்படுவதாகவோ அல்லது பாடசாலையில் தயாரிக்கப்படுவதாகவோ அல்லது பெற்றோரால் சுழற்சி அடிப்படையில் தயாரிக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும். அவ்வாறான ஏற்பாட்டை மேற்பார்வை செய்யும் பொறுப்பு தனியாள் ஒருவரிடமோ அல்லது குழு ஒன்றிடமோ மிகவும் தெளிவாக ஒப்படைக்கப்பட வேண்டும்.
- பிள்ளை அபிவிருத்தி நிலைய பணியாளர்களும் / அல்லது ஆசிரியர்கள் அடிப்படை முதலுதவி,பொதுவான நோய்களை இனங்காணல் முதலியவற்றில் பயிற்சி யைப் பெற்றிருப்பதுடன் தேவைப்படும் போது சிபாரிசு செய்யும் ஆற்றல்களையும் கொண்டிருத்தல் வேண்டும்
- எல்லாப் பிள்ளைகள் மத்தியிலும் நல்ல சுகாதாரப் பழக்க வழக்கங்களை பிள்ளை அபிவிருத்தி நிலையம் ஊக்குவித்தல் வேண்டும்.
- பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் ((DDHS), சுகாதார மருத்துவ அலுவலர் (MOH) ஆகியோருடன் நெருங்கிய தொடர்பை பிள்ளை அபிவிருத்தி நிலையம் வைத்திருப்பதுடன் நிலையத்துக்கு வருகை தரும் எந்த ஒரு பிள்ளைக்கும் தொற்றக் கூடிய நோய்கள் இருக்கின்றதென ஐயப்பட்டால் அவர்களுக்கு அவ்வாறான சம்பவங்களை அறிவித்தல் வேண்டும்.
- முதலுதவிப் பெட்டி கிடைக்கக் கூடியதாயிருப்பதுடன் அது நன்கு பேணப்படவும் வேண்டும்

## 3.2 கற்றலும் உளவியல்-சமூகச் சூழலும்

ஒவ்வொரு பிள்ளையினதும் ஆற்றல்கள், கவனமான வழிகாட்டல்கள் மற்றும் ஆரோக்கிய மான சுயாதீன உணர்வு என்பவற்றை முன்னெடுப்புச் செய்தல், தன்னம்பிக்கை மற்றும் புத்தாக்கம் முதலியனவற்றை மதித்தவாறு விருத்திக் கல்வி நிலையத்தினுள் இடம் பெற வேண்டும். ஏனெனில் இந்த வயதிலுள்ள பிள்ளைகள்,அறிவுசார்ந்த, உள இயக்க மற்றும் மொழிசார்ந்த பகுதிகளில் முன்னேற்றம் காண ஆரம்பிப்பர். அத்துடன் அவர்கள், சமூக, மற்றும் விழுமியங்களும் ஆளுமைப் பண்புகளையும் கொண்ட திறமைத் தொகுதிகளை விரிவாக்கம் செய்து கொண்டே இருப்பர்.

### *3.2.1 கற்றற் சூழல் / அடிப்படைத் தேவைகள்*

- அவதானிப்புத் திறன்கள், சூழல் விழிப்புணர்வு மற்றும் காற்று, சூரியன், மழை போன்ற இயற்கை நிகழ்வுகளின் தாக்கங்களை அவதானித்தல் முதலியவற்றை விருத்தி செய்வதற்கான இயற்கைச் சுவடுகளாகப் பயன்படுத்தக் கூடிய இடவசதியை வழங்கும் பாடசாலை வளவு அல்லது அயலில் அமைந்துள்ள அண்மித்த சூழல்
- பிள்ளைகள் தனியாகவும் குழுவாகவும் விளையாடக்கூடிய பாதுகாப்பான வெளியகப் பகுதி
- தாழ்வான கிளைகள் கொண்ட சிறிய மரங்களையுடைய விளையாட்டு வளவு, பிள்ளைகள் ஏறுவதற்கான சிறிய மேடு, பிள்ளைகள் ஊஞ்சலாடவும் ஏறி விளையாட வும் மரங்களுக்கு இடையில் கட்டப்பட்ட கயிறு, மணல் மற்றும் விளையாட்டுப் பகுதிகள், களியுடன் உருவமைப்பதற்குப் போதுமான இடவசதி போன்றவை
- பிள்ளைகளின் ஆக்கத்தன்மை, மாற்றி அமைத்துக் கொள்ளல், தன்னிச்சையான இயல்பு மற்றும் வெளித் தோன்றும் திறன்களை வெளிக்கொணரக் கூடிய போதுமான ளவு கற்றல் சாதனங்களும் அனுபவங்களும் மற்றும் பிள்ளையின் ஆர்வங்களை விருத்தி செய்யும் வாய்ப்புக்களை வழங்கல்
- மணல் மற்றும் நீர் விளையாட்டுப் பகுதிகளுக்கான வித்தியாசமான அளவுகள், வடிவங்கள் மற்றும் கனவளவிலான கொள்கலன்கள்.
- குறிப்பான எண்ணக்கருக்கள் மற்றும் திறன்களை விருத்தி செய்வதற்கான கற்றல் / கற்பித்தல் தொகுதிகள் - உதாரணமாக: புதிர்கள், பட அட்டைகள் மற்றும் புரட்டல் அட்டைகள்.
- பாத்திரமேற்று நடித்தல் மற்றும் நாடகமாக்கலின் போது பயன்படுத்துவதற்காக வித்தியாசமான வகைகள் மற்றும் அளவுகள், நிறங்களிலான பழம் ஆடைகளும் தளவாடியொன்றையும் கொண்ட ஆடை மாற்றும் மூலையொன்று
- பிள்ளைகள் மீது பாதுகாப்பாகக் கவனம் செலுத்தக் கூடியவாறாக முன்பள்ளி ஆசிரியருக்கு இயலுமான விதத்தில் சகல விளையாட்டு இடங்களும் (வெளியக மற்றும் உள்ளகப் பகுதிகள்) ஒழுங்கமைக்கப்படல்

### *3.2.1 உளவியல் - சமூக சுற்றாடல்*

- சுறுசுறுப்பாக விளங்குவதற்கு அவசியமான களிப்பு, பாதுகாப்பு, அன்பு மற்றும் அங்கீகாரமும் சுதந்திரமும் கொண்ட உணர்வை பிள்ளைகள் அனுபவிப்பதற்கு ஏதுவாக ஒட்டுமொத்தமான சூழலும் அமைய வேண்டும்.
- பிள்ளைகளும் அவர்களின் பெற்றோர்களும் வருகையின்போதும் விடுகையின்போதும் நிலையத்தின் ஊழியர்களால் உள்ளன்புடன் உபசரிக்கப்படுவதுடன் ஏற்றவாறு அக்கறையுடனும் நடந்து கொள்ளவும் வெண்டும்.
- பிரம்பைக் காட்சிப்படுத்தல்,உரத்த குரலிலும் கண்டிப்பான தொனியிலும் கட்டளை யிடுதல் அல்லது அமைதியாகவே இருக்க வேண்டும் என வலியுறுத்துதல் போன்ற வற்றினால் தோற்றும் அச்சுறுத்தல்கள் அற்ற சூழல்
- பிள்ளைகளால் வெளிப்படுத்தப்படும் தனிப்பட்ட வித்தியாசங்களாலான தேவைகள், ஆர்வங்கள், மற்றும் நடத்தைகள் புரிந்து கொள்ளப்படுதலும் மதிக்கப்படுதலும்
- பிள்ளைகளுக்கு தாம் விரும்பும் / தெரிவு செய்த செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சுதந்திரத்தையும் வாய்ப்பையும் வழங்குதல் வேண்டும்.
- ஓரளவு முயற்சியைக் கொண்டு தேர்ச்சியடைக் கூடியதும் அதனை தொடரும் வெற்றியின் களிப்பை பிறருடன் அனுபவிக்கும் செயற்பாடுகளை பிள்ளைகளுக்கு வழங்குதல்
- கைகளையும் கால்களையும் கழுவுதல், உடைகளையும் காலணிகளையும் அணிதல் போன்ற எளிமையான பணிகளைப் பிறரில் தங்கியிராது தாமே செய்து கொள்ளும் விதமாக பிள்ளைகளுக்கு உதவுதலும் விருப்பத்துடனும் களிப்புடனும் கௌரவத்துட னும் அவற்றைச் செய்வதற்கு பிள்ளைகளை ஊக்குவித்தல்.
- பிள்ளைகள் தத்தம் திறமைகளை விருத்தி செய்து கொள்ளவும் அவற்றை வெளிப்படுத்தவும் ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- பொருத்தமான சந்தர்ப்பங்களில் பிள்ளையின் வேலைகள் பாராட்டப்பட்டு, ஊக்கு விக்கப்படலும் குழுநிலையில் அங்கீகாரத்தை வழங்குவதன் மூலம் பிள்ளையின் தன்னம்பிக்கை, சுய கௌரவம் மற்றும் சாதித்த உணர்வு முதலானவற்றைக் கட்டி யெழுப்பலும்.

- பிள்ளைகளை ஒழுக்காற்றுப்படுத்தும் போது விமர்சனங்களும் கண்டித்தலும் தவிர்க் கப்பட்டு, ஏற்றுக் கொள்ளக்கூடிய நடத்தையின்பால் பிள்ளையின் கவனத்தை ஈர்த்தலும்.
- பிள்ளைகள் சுயமாகத் தூண்டப்படுவதில் ஈடுபடுவதனாலும் மனமகிழ்ச்சி தரும் செயற்பாடுகளினாலும் விளைகின்ற சுய ஒழுக்கம் ஊக்குவிக்கப்படல்
- ஒன்றாகச் சேர்ந்து விளையாடவும், வளங்களைப் பகிர்ந்து கொள்ள ஒருவருக்கொரு வர் உதவவும் மற்ற பிள்ளைகளால் வெளிப்படுத்தப்படும் கருத்துக்களையும் தேவை களையும் மதிப்பதற்கு போதியளவு வாய்ப்புக்களை வழங்கல்
- பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஒருவரோடொருவர் மனதுக்கு உகந்த விதமாக உரை யாடவும் தமது கருத்துக்களை வெளிப்படுத்தவும் பிள்ளையுடன் பிள்ளை நேரடியாக கலந்துரையாடுவதில் ஈடுபடவும் ஊக்குவிக்கப்படல்
- தமது போசாக்குத் தேவைகளை நிறைவேற்றுவது மட்டுமன்றி சிறந்த உணவுப் பழக்கங்களையும் நடத்தைகளையும் கட்டியெழுப்பும் விதமாக தமது உணவு உட் கொள்ளும் விதத்தைப் பழகிக் கொள்ளுவதற்கு பிள்ளைகளுக்கு உதவல்
- துப்புறவுக்கான தேவை,ஓழுங்கு,மற்றும் பாதுகாப்புக்கான அக்கறை முதலியவற்றை வெளிக்கொணரும் அன்றாட நடவடிக்கைகளில் பங்கேற்கும்படி பிள்ளைகளை ஊக்குவித்தல்
- உரிமை, சொந்தம் மற்றும் பரஸ்பர பொறுப்புணர்வு முதலானவற்றைக் கட்டியெழுப்ப பிள்ளைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் சேம நலன் குறித்த விடயங்களில் ஆசிரியர்கள் அக்கறையாக இருத்தல் வேண்டும்.
- ஏனைய பிள்ளைகள் அல்லது பெற்றாரின் முன்னிலையில் பிள்ளைகளை ஆசிரியர் கள் ஒப்பிடுதலில் ஈடுபடக் கூடாது.
- ஒவ்வொரு தனிப்பட்ட பிள்ளையினதும் முயற்சிகளை ஆசிரியர்கள் மதிப்பீடு செய்து, பாராட்டி ஊக்குவித்தல் வேண்டும்.
- உணவு தயாரித்தல் மற்றும் உணவு பரிமாறுதல் போன்றவற்றிலும் அவ்வாறான நேரங்களில் பிள்ளைகளுடன் இடைத்தொடர்பு கொள்ளுதல் போன்ற அன்றாட செயற்பாடுகளில் சுதந்திரமாகத் துணை புரிவதற்கு பெற்றோரை உணர்வு பெறச் செய்தல்
- வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் பாடசாலை நிகழ்ச்சிகளின் மூலம் சமூகத்தின் முக்கிய பிரமுகர்களை பிள்ளைகள் சந்திப்பதற்கும் உள்ளூர் திறமைகளை அவ தானிப்பதற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்
- உள்ளூர் சுற்றாடலுடனும் அவற்றின் வளங்கள் மற்றும் அமைப்புக்கள் குறித்து பரிச்சயம் பெறவும் பிள்ளைகளை சுற்றுலாக்களில் அழைத்துச் செல்லல்

## 3.3 நிர்வாக நியமங்கள்

ஒரு முன் பள்ளியானது எவ்வாறு முறைப்படியாகவும் வினைத்திறனுடனும் முகாமை செய்யப்படுகின்றது என்பதை நிரவாக நியமங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சேவைகளை பயனுறுதியுடன் வழங்குவதற்கு, சில வகையான பதிவேடுகளைப் பேணுதலும் சமய மற்றும் கலாசார செயற்பாடுகளுடனான ஏற்பாடு செய்தலும் அவசியமாகின்றன.

**ஆவணங்கள்** (பின்வரும் ஆவணங்கள் உடனடியாகக் கையளிக்கப்படுவதற்கு ஆயத்தமாக இருப்பதுடன் பாதுகாப்பாகவும் களஞ்சியப்படுத்தப்படவும் வேண்டும்.)

- சேர்வு இடாப்பு
- பிள்ளைகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றார் கூட்டங்களுக்கான வரவு இடாப்பு
- சுகாதாரப் பதிவேடுகள்
- அவசரத் தேவைகளின் போது தொடர்பு கொள்ள வேண்டிய பாதுகாவலர்கள் / ஏனையோரின் முகவரி பதிவேடு
- பிள்ளைகளின் திறன் அபிவிருத்திப் பதிவேடுகள் உட்பட பிள்ளைகளின் முன்னேற்ற அறிக்கைகள்
- பாடசாலைச் செயற்பாடுகளின் பதிவேடுகள், சம்பவத் திரட்டுப் பதிவேடு. பெற்றார் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களின் விபரங்கள், பெற்றார் - ஆசிரியர் கூட்டறிக்கைகள் போன்றன.
- நிதி அறிக்கைகள்

- ஆசிரியர்கள் தனிப்பட்ட விவரக் கோவை
- அறிவித்தல் பலகை
- பிள்ளை விருத்தித் தகவல்களை பெற்றோருடன் பகிர்ந்து கொள்ளும் காட்சிப் பலகை
- பாடசாலை விவகாரங்கள் தொடர்பான அல்லது பெற்றார் உதவ முன்வரும் ஒத்துழைப்பு தொடர்பான கருத்துக்களுக்கான கருத்துரைப்பெட்டி
- முன்பள்ளிப் பிள்ளைகளுக்காக சேவைகள் வழங்கும் உத்தியோகத்தர்களின் விபரங் களைக் கொண்ட ஆவணங்கள் காட்சிப்படுத்தப்பட வேண்டும்
- மேலே கூறப்பட்டவைகளுக்கு மேலதிகமாக, முகாமைச் சபையொன்றும், முகாமைச் சபையின் வழமையான கூட்டங்களும் பெற்றார் ஆசிரியர்களின் மாதாந்தக் கூட்டங் களும் இருத்தல் வேண்டும்.

### 3.4 சமயப் பின்னணி

- பல சமயங்களைக் கொண்ட அமைப்பில், வணக்க வழிபாடுகளில் பங்கேற்பது பெற்றோரின் சம்மதத்துடனேயே இடம் பெற வேண்டும் அல்லது அதற்குப் பதிலாக குறுகிய கால அமைதி காக்கப்பட வேண்டும்.
- தினசரி வணக்க வழிபாடுகளுக்காக பிரத்தியே இடம் ஒதுக்கப்பட வேண்டும். அத்துடன் வணக்க வழிபாடுகளின் போது பிள்ளைகள் தமக்குப் பொருத்தமான வணக்க நிலைகளில் இருந்து அனுட்டிப்பதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும்.
- தினசரி வணக்க வழிபாடுகளின்போது சமூகமளிக்கும் சகல மூத்தோரும் சமய வழிபாடுகளில் பிள்ளைகளுடன் இணைந்து கொள்ள வேண்டும்.
- சமய வைபவங்களை நினைவு கூர விசேட கொண்டாட்டங்கள் நிகழ வேண்டும்.

### 3.5 விசேட தேவைகளையுடைய பிள்ளைகளின் சுகாதாரத்தைப் பரிசோதித்தலும் இனங்காணலும்

- எந்த விதமானஇயலாமைகள், போசாக்கின்மை அல்லது வேறேதும் குறைபாடுகள் போன்றவற்றை இனங்காண்பதற்காக அவற்றில் கவனஞ் செலுத்துவதற்காக வருடாந்த அல்லது அவசியமாயின் வருடம் இருமுறை சுகாதாரப் பரிசோதனைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்.

### 3.6 பணியாளர்

- ஒவ்வொரு 20 பிள்ளைகளுக்காகவும் தகுதி வாய்ந்த ஆசிரியர் ஒருவர் இருத்தல் வேண்டும். ஆசிரியர்கள், வழமையாக (வருடம் ஒரு முறையாவது) புதுப்பித்தல் பயிற்சியைப் பெறுதல் வேண்டும்.
- உணவு தயாரிப்பதற்கும், பாடசாலை வளவையும் மலசல கூடங்களையும் துப்புறவு செய்யும் பணிகளைக் கவனித்துக் கொள்வதற்கு துணை ஊழியர்கள் இருத்தல் வேண்டும். இவ்வாறான துணை ஊழியர்கள் குறைந்த பட்சம் ஒருவராவது இருத்தல் வேண்டும். நிறுவனத்தின் அளவைப் பொருத்து துணை ஊழியரின் தொகை அமைய வேண்டும்.
- ஆசிரியர்களுக்கும் ஏனைய ஊழியர்களுக்கும் நலன்புரி வசதிகள் செய்து கொடுக் கப்பட வேண்டும்.

## 4.பிள்ளை அபிவிருத்தி நிலையங்களில் பெற்றார் பங்குபற்றல்

## 4.1 நோக்கங்களும் குறிக்கோள்களும்

- முன்பிள்ளைப் பருவ பராமரிப்பு மற்றும் விருத்தி பற்றிய முக்கியத்துவம் தொடர்பான சிறப்பான புரிந்துணர்வை பெற்றார் மத்தியில் உருவாக்குதல்
- பெற்றாரின் பிள்ளை வளர்ப்பு நடிபங்கினை மதித்தலை உருவாக்கல்,பிள்ளை வளர்ப்புத் திறனை விருத்தி செய்தல், பிள்ளைகளின் அபிவிருத்திச் செய்முறை களில் செயல்ரீதியாகப் பெற்றார் பங்களிக்கச் செய்தல்
- பிள்ளை அபிவிருத்தி நிலையங்களின் முக்கியத்துவத்தைப் பெற்றார் விளங்கிக் கொள்ளச் செய்தலும் அவற்றைத் திட்டமிடல் மற்றும் பேணுதலுக்கான பொறுப் புக்களை பகிர்ந்து கொள்ள ஊக்குவித்தல்

## 4.2 பிள்ளை அபிவிருத்தி நிலையங்களில் ஆர்வத்துடன் பங்குபற்றுவதற்காக பெற்றார் தெரிந்து கொள்ள வேண்டியவை

### *4.2.1* பிள்ளையின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திச் செய்முறையை விளங்கிக் கொள்ளல்

- உயிர் வாழ்தல், வளர்ச்சி மற்றும் விருத்தி தொடர்பான பிள்ளையின் தேவைகள்
- கருத்தரித்ததிலிருந்து ஐந்து வயது வரையான காலப் பகுதியின் முக்கியத்துவம்
- அபிவிருத்திச் செய்முறையின் முழுமையான இயல்பு
- போசாக்கு, சுகாதாரம் ஆரோக்கியம் என்பவற்றின் முக்கியத்துவம்
- ஆரம்பகாலத் துாண்டல்களும் மூளை வளர்ச்சியில் அதன் தாக்கங்களும்
- செயற்பாடுகள் மற்றும் விளையாட்டின் மூலம் பிள்ளை கற்கிறது.
- உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் சுறுசுறுப்பாக விளங்குவதற்கு காப்பான ஒரு சூழலில் ஏராளமான அன்பும், ஏற்றுக் கொள்ளலும், பராமரிப்பும் சுதந்திரமும் பிள்ளைக்கு தேவைப்படுகிறது.
- உடல்ரீதியாகவும், மனவெழுச்சி ரீதியாகவும் சமூக ரீதியாகவும் செழித்து விளங்கு வதற்காக அன்பு காட்டும், பராமரிக்கும் பரிவுடன் நடந்து கொள்ளும் பெற்றார் களுடனான விசுவாசமிக்க உறவை பிள்ளை விருத்தி செய்ய நாடுகிறது.
- சம வயதினருடன் குழு விளையாட்டு மற்றும் குழுவில் பங்கேற்றல் மூலம் சமூக மயமாக்கிக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் பிள்ளைக்குத் தேவைப்படுகின்றன.
- சுய கௌரவம், தன்னம்பிக்கை மற்றும் தேர்ச்சி பற்றிய உணர்வு பிள்ளை விருத்தி செய்து கொள்ள வேண்டியுள்ளது.
- குறிப்பிட்ட விதத்தில் பிள்ளையைச் சிந்திக்க வைப்பது அவர்களின் நோக்கினை பாரபட்சமாக்கும்.

### *4.2.2* பிள்ளை மற்றும் பிள்ளை அபிவிருத்தி தொடர்பாக பெற்றார் மத்தியில் நிலவும் தப்பபிப்பிராயங்கள்

- பிள்ளையின் சமூக மற்றும் உடல்ரீதியான சுற்றாடல் பிள்ளை விருத்தியில் அவ்வளவு முக்கியத்துவம் கொண்டதல்ல என்ற கண்ணோட்டம்
- ஆரம்பகாலகட்டத்தில் உடல்ரீதியான விருத்திக்குப் போதியளவு கவனம் செலுத்துவதே அவசியம் என்ற நம்பிக்கை
- பிள்ளைகள் அவர்கள் பிறக்கும் மரபணுக்களுடனேயே அவர்களின் விருத்தி தங்கியுள்ளது என்பதும் அவர்கள் வளர்ச்சி பெறும் சூழலில் என்ற நம்பிக்கை
- நடத்தையைச் சீராக்க கடுமையாக ஒழுக்காற்றுப்படுத்தல் மற்றும் தண்டனை என்ப வற்றிலேயே நம்பிக்கை கொண்டிருத்தல்
- பிள்ளையை அவமானப்படுத்துவது பிள்ளையின் உளவியல் விருத்திக்கு ஊறு செய்யும் என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளாமலிருப்பதும் பிள்ளைகளை ஒழுக் காற்றுப்படுத்த அதனை ஒரு வழியாகப் பயன்படுத்துவது.
- தமது பெற்றார் தம்மை வளர்க்க கடைப்பிடித்த நடைமுறைகளையே தாமும் கடைப்பிடிப்பதும் எல்லாப் பெற்றாருக்கும் தம் பிள்ளைகளை வளர்ப்பது எப்படி தாமறிவோம் என எல்லாப் பெற்றாரும் நம்பியிருப்பது
- விருத்தி நிலையங்களைப் பற்றிய விழிப்புணர்வின் முக்கியத்துவத்தை அங்கீகரிக் காமலிருப்பதும் பிள்ளைகளை முன்பள்ளிகளுக்கு அனுப்பாமலிருப்பதும்.
- வெளிப்படையாக அன்பையும் அங்கீகாரத்தையும் காட்டுவது மோசம் என்ற நம்பிக்கையும் இதனால் அதனை வேண்டுமென்றே மறுப்பதும்

- உகந்த மட்ட அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை மறுப்பதன் மூலம் பல்வேறு விதமான தடங்கல்களைக் கொண்டு பிள்ளையின் பால் எதிர்மறையான மனப்பாங் கைக் கொண்டிருப்பது.
- பாடசாலை அனுமதிக்கு முன்னராக ஒரு குறுகிய காலத்துக்கு மட்டுமே முன் பள்ளிக்கு அனுப்புவது போதுமானது என்ற நம்பிக்கை
- முன்பள்ளிப் பாடசாலைகள் வாசித்தல், எழுத்து மற்றும் எண்ணுதல் திறன்களை விருத்தி செய்ய வேண்டும் என்ற கருத்தில் ஊன்றியிருப்பது.

### *4.2.3* பிள்ளையின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் குடும்பச்சுற்றாடலின் முக்கியத்துவம்

- தனக்குப் பொருத்தமான சூழலில் மட்டுமே வளர்ச்சியும் அபிவிருத்தியும் சுமுகமாக முன்னேறும்.
- பிள்ளையினுள் காப்பும் அரவணைப்பும் கொண்ட உணர்வை ஏற்படுத்த நல்ல இணக்கமான குடும்பச் சூழல் இன்றியமையாதது.
- வீட்டு வன்முறை, மித மிஞ்சிய மதுப் பழக்கம், பெற்றார் ஒருவரோ அல்லது இருவருமே இல்லாத நிலைமைகள், பிள்ளையின் பாதுகாப்பு மற்றும் அரவணைப்பு பற்றிய உணர்வை பெரிதும் பாதிக்கும்.
- பிள்ளையின் உடல்ரீதியான தேவைகளில் மட்டுமே கவனம் செலுத்துவது போது மானதன்று. முழுமையான அபிவிருத்தியை முன்னெடுப்புச் செய்ய போதுமானளவு தூண்டலை ஏற்படுத்தக்கூடிய விதமாக வீட்டினுள்ளும் வெளிச் சூழலிலும் கணிச மான அளவு அன்பு, ஆதரவு மற்றும் அங்கீகாரமும் அனுபவங்களும் பிள்ளைக் குத் தேவைப்படுகிறது.
- பெற்றோரும் குடும்பத்திலுள்ளஏனைய மூத்தோரும் பிள்ளைக்கு சிறிது நேரத்தை அர்ப்பணிப்பதற்கும், அன்பாகவும் பாசமாகவும் நேரடியாக இடைத்தொடர்பு செய்ய வும் வழிபார்த்துக் கொள்ள வேண்டும்.
- பிள்ளைகள் சாதிப்பதையிட்டு மகிழ்ச்சி கொள்ளவும் உளவியல்-சமூக விருத்தியை முன்னெடுப்புச் செய்வதற்குமாக அங்கீகாரத்தையும் ஏற்றுக் கொள்ளலையும் வழங் குவதற்கு பெற்றாருக்கு ஏராளமான வாய்ப்புக்கள் இருக்கின்றன.
- புறக்கணிப்பு போன்ற எல்லாவிதமான பிள்ளைத் துஷ்பிரயோகங்களிலிருந்தும் உடல் ரீதியான தண்டனைகளிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கு பெற்றார் முதலிடம் தர வேண்டுவதுடன் வெளியகமான ஆபத்துக்களிலிருந்தும் துஷ்பிரயோகங் களிலிருந்தும் பிள்ளையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

### *4.2.4*அபிவிருத்தி மையமான செயற்பாடுகளில் பெற்றார் பங்குபற்றக் கூடிய விடயங்கள்

- வசதிகளை ஏற்பாடு செய்தலும் / அவற்றைப் பேணுதலும்.
- வெளியக விளையாட்டுப் பகுதிகள்/உபகரணங்களை அமைத்து அவற்றைப் பேணு வதற்கு உதவுதலும் குறைந்த செலவிலான பாரம்பரிய விளையாட்டுச் சாதனங் களை ஏற்பாடு செய்தலும்.
- பாடசாலை வளவைப் பேணுவதற்கும், பிள்ளைகளின் மேசைகளையும் கதிரைகள் மற்றும் சுவர்களைத் துப்புறவு செய்து வர்ணந் தீட்டுவதற்கு சிரமதானப் பணிகளை மேற் கொள்ளுதல்.
- பிள்ளைகளுக்கு ஊட்டச்சக்தியுள்ள ஒரு வேளை உணவை ஏற்பாடு செய்வதில் பங்கேற்றல்
- பாடசாலைச் செயற்பாடுகள், பிள்ளைகளின் முன்னேற்றம் முதலானவற்றைக் கலந்தாலோசிப்பதற்காகவும் தீரமானம் செய்தல், திட்டமிடல், அவதானித்தலையும் கண்காணித்தலையும் கையாள்வதற்காக பெற்றார் கல்வியை வலுவூட்டல் போன்ற வற்றை மேற்கொள்வதற்காக வழமையாக கூடும் பெற்றார் - ஆசிரியர் சங்கங் களை அமைத்தல்.
- ஊர்த் தலைவர்கள் மற்றும் பெற்றாரை உறுப்பினர்களாகக் கொண்ட விருத்திக் குழுக்களை ஒவ்வொரு நிலையத்திலும் அமைத்தல்
- விருத்தி நிலைய ஆசிரியருடனும் குடும்ப சுகாதாரப் பணியாளருடனும் ஒத்துழைப் பதன் மூலம் போசாக்கு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளலும் விசேட கவனம் தேவைப்படும் பிள்ளைகளாக இனங்காணப்பட்டுள்ளவர்கள் தொடர்பாக சிபாரிசுச் சேவைகளைப் பயன்படுத்தலும் தேவைகளைக் கவனித்தலும்
- விருத்தி நிலைய நிர்வாகத்துக்கு உதவுதல்
- பிள்ளைகள் வளர்வதற்கான நிலைமைகளை மேம்படுத்த உதவும் விருத்தி நிலைய செயற்பாடுகள் பிணைந்துள்ள குடும்பங்களுக்கிடையிலான ஒத்துழைப்பை யும்

ஐக்கியத்தையும் கொண்ட சமூக வலையமைப்பை விருத்தி செய்வது தொடர் பாகப் பணிபுரிதல்.

### *4.2.5* பெற்றாரின் பங்கேற்பை ஒன்று திரட்டுவதற்கான பொறிமுறை

- பெற்றாருக்கு வசதியான காலவேளைகளில் பெரிய குழுக்களைப் போலவே சிறிய குழுக்களாகவும் (குழுக்கூட்டங்கள் இடம் பெறும்போது முழு நேரங்களிலும் சமூக மளித்திருப்பதைக் கட்டாயமாக்குதல்) அவர்களைச் சந்தித்தல்
- முறைசார்ந்தவை போலவே முறைசாராத கலந்துரையாடல் கூட்டங்களை ஒழுங்கு செய்தல். இதனால் பெற்றோருக்கு ஆசிரியர்களைப் போலவே ஏனைய பெற்றோ ருடனும் சுதந்திரமாக இடைத்தொடர்பு செய்வது இலகுவாக இருக்கும்.
- தமது பிள்ளைகளுக்கு சிறந்ததை ஆசிரியர் வழங்கும் ஆற்றலில் பெற்றாரின் நம்பிக்கையை வென்றெடுக்கும் விதமாக பெற்றாருக்கான வழிப்புணர்வுக் கூட்டங் களை ஒழுங்கு செய்தல்.
- ஒவ்வொரு பெற்றாருக்கும் எதையாயினும் பங்களிப்புச் செய்யமுடியும் என்பதை யும் அவ்வாறு செய்யப்படும் ஒவ்வொரு பங்களிப்பும் அது சிறியதாயினும் பெரிதா யினும் சமமாகவே மதிக்கப்படுவதுடன் அவை முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதையும் நம்பச் செய்தல்.
- பெற்றாருக்கு அவர்களது பிள்ளைகளின் முன்னேற்றம் குறித்து வழமையாக அறியச் செய்தல்.
- தமது செயற்பாடுகளை வீடுகளில் ஒழுங்கமைக்கும் வழிவகைகள் குறித்து பெற்றாரை விழிப்புணர்வு பெறச் செய்தல். இதன் மூலம் பிள்ளையின் முழுமை யான விருத்திக்கான உச்ச மட்டத் தூண்டலை வழங்குவதற்கும் அன்பு, சுதந்திரம் மற்றும் அங்கீகரிக்கும் சூழலை ஏற்பாடு செய்யவும் பிள்ளைகளுடன் நேரத்தை செலவிட முடியுமாகவும் இருக்கும்.
- விருத்தி நிலையங்களில் சமூக மற்றும் சமய செயற்பாடுகளை ஏற்பாடு செய்தலும் பிள்ளைகளின் பெற்றார் குடும்பங்களின் பங்களிப்புடன் கல்விச் சுற்றுலாக்களில் பங்கேற்றலும்.
- தமது அபிப்பிராயங்களை வெளிப்படுத்தவும் (கருத்துரைப் பெட்டி)எடுத்தலும் எதிர் வரும் நிகழ்வுகளை பெற்றோர் அறிந்திருக்கச் செய்வதற்காகவும் அவர்கள் பயன் படுத்துவதற்கு ஏற்ற கருத்துக்களுக்குமான (அறிவித்தல் பலகை) பெற்றோருக்கு வசதி செய்யும் நடவடிக்கைகளை எடுத்தல்
- ஒவ்வொரு மற்றும் எந்தவொரு பிள்ளைக்கும் இயலுமான தலைசிறந்த பாதுகாப் பும் கவனிப்பும் அவரவரின் தேவைக்கு ஏற்றவாறு தனிப்பட்டவிதமாக கவனம் எடுக்கப்படும் என ஒவ்வொரு பெற்றோருக்கும் எடுத்துக்காட்டல்

## 5. பிள்ளை அபிவிருத்தி நிலையப் பயிற்சிக்கான நியமங்களும் தேவைகளும்

தரம் வாய்ந்த பிள்ளைப் பராமரிப்பின் மிக முக்கியமான அம்சமாக விளங்குபவர் முன்பள்ளி ஆசிரியராவார். பிள்ளைகளின் தனிப்பட்ட தேவைகள் தொடர்பாக இதயங்கனிந்த, பராமரிக்கின்ற, கவனஞ் செலுத்துகின்ற, விடயமறிந்த, வளமிக்கவராக அவர் இருப்பதுடன் பிள்ளைகளின் சமூக, மனவெழுச்சி, உடல் சார்ந்த மற்றும் அறிவு சார்ந்த விருத்தியை விரிவாக்குவதற்கு ஏற்ற அபிவிருத்தி வளர்ச்சிக்குப் பொருத்தமான செயற்பாடுகளைத் திட்டமிடக் கூடிய ஆற்றல் உடையவராகவும் இருத்தல் வேண்டும். மேலும் அவர், சுகாதாரம், போசாக்கு, முற்காப்புப் பராமரிப்பு, பிள்ளை அபிவிருத்தியைக் கண்காணித்தல், குறை பாடுடைய குழந்தைகளுக்கான சேவைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களில் பெற்றாரின் ஈடுபாடு முதலியனவற்றை உள்ளடக்கும் சேவை வளங்களை திட்டமிட்டு ஒழுங்கு செய்பவராக இருத்தல் வேண்டும்.

### 5.1 பிள்ளை அபிவிருத்தி நிலைய ஆசிரியர் பயிற்சிக்கான அனுமதித் தேவைகள்

பிள்ளை அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தராகப் பயிற்சியைப் பெறுவதற்காக ஆட்சேர்க் கப்படுவோர் பின்வரும் குறைந்தபட்ச தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- தாய்மொழிப் பாடத்தில் திறமை சித்தியும் கணிதபாடத்தில் சாதாரண சித்தியையும் கொண்டு க.பொ.த.(சா/த) பரீட்சையில் குறைந்த பட்சம் ஆறு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

  **வயதுப் பிரிவு –18 – 30 வயதுக்கு இடையில்**
  **முன்பள்ளி பிள்ளைப் பராமரிப்பு மற்றும் அபிவிருத்திக்கான தேசிய குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நியமமான பாடத்திட்டத்தினைப் பயன்படுத்தும் வாண்மைத்துவப் பயிற்சிக்கான குறைந்தபட்ச காலம் பின்வருமாறு அமைதல் வேண்டும்.**

- ஓராண்டுப் பயிற்சி – (300 மணித்தியாலங்கள்)
- ஆண்டுக்கு ஒரு தடவையாவது வாராந்த நாட்களில் சேவைக் காலப் பயிற்சி (50 மணித்தியாலங்கள்)

### 5.2 வாண்மைத்துவ பயிற்சிப் பாகத்தின் புறவரை

- **முன்பள்ளி பிள்ளைப் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தியின் தத்துவ ரீதியான, வரலாற்று மற்றும் உளவியல் ரீதியான பின்னணி**
- **சிறுவர் உரிமை ( உயிர் வாழ்தல், பெரிதும் உகந்த வளர்ச்சியும் அபிவிருத்தி மற்றும் காப்பு போன்றவற்றில் விசேட வலியுறுத்தல்)**
- **கருத்தரித்ததிலில் இருந்து ஐந்து வயது வரையான வளர்ச்சியும் விருத்தியும்**

  - வளர்ச்சி மற்றும் விருத்தி பற்றிய எண்ணக்கரு
  - முழுமையான விருத்தி பற்றிய எண்ணக்கரு
  - வளர்ச்சியிலும் விருத்தியிலும் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

  1. சுகாதாரம், போசாக்கு மற்றும் ஆரோக்கியம்
  2. சுற்றாடல், கற்றல், மற்றும் அனுபவம் பற்றிய முக்கியத்துவம்
  3. ஆரம்ப கால ஊக்கியும் முறை வளர்ச்சியும் பற்றிய முக்கியத்துவம்
  4. அபிவிருத்தி சார்ந்த தடங்கல்கள்

## 6. பிள்ளைநேய பிள்ளை அபிவிருத்தி நிலைய எண்ணக்கரு

### 6.1 5 வயது வரையான வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியின் மைல் கற்கள்

- பிள்ளைகள் எவ்வாறு கற்கின்றனர் மற்றும் விளையாட்டின் முக்கியத்துவம்
- உள இயக்க விருத்தி
- உள சமூக விருத்தி
- மொழி விருத்தி
- அறிவுசார் விருத்தியும் எண்ணக்கரு உருவாக்கமும்
- அழகியல் விருத்தியும் சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வும்
- ஆளுமையின் ஒட்டு மொத்தமான விருத்திக்கும் வாழ் நாட் கற்றலுக்கான அத்திவாரமிடலும்

1. பிள்ளை அபிவிருத்தி நிலைய வெளிப்பாடும், பழக்கவழக்கங்கள், விழுமியங்கள் மற்றும் மனப்பாங்குகளும், சமூக–கலாசார மற்றும் சமயஞ்சார் சுற்றாட லுக்கு அறிமுகமாதலும்
2. ஆரம்பப் பாடசாலைக்கு பிள்ளை நுழையும் தருணத்தில் அடைந்திருக்க வேண் டும் என எதிர்பார்க்கப்படும் செய்திறன்கள்

### 6.2 ஆபத்துக்கு உள்ளாகக் கூடிய பிள்ளைகளை நேர காலத்துடன் இனங் காணல்

### 6.3 பிள்ளை அபிவிருத்தி நிலையப் பிள்ளைகளின் வளர்ச்சி மற்றும் போசாக்குத் தன்மையைக் கண்காணித்தலின் முக்கியத்துவம்

- ஐந்து வயதுக்குக் கீழான பிள்ளைகளின் சுகாதாரத்தையும் போசாக்கையும் முன்னெடுப்புச் செய்தல். நாட் பராமரிப்பு மற்றும் பிள்ளை அபிவிருத்தி நிலையங்களின் பங்கு. சுகாதார மேற்பார்வையும் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு குழுக்களுடன் இணைப்பாக்கஞ் செய்தலும் பதிவேடுகளைப் பேணுதலும்.
- பிள்ளை அபிவிருத்தி நிலையங்களில் உயர்தரமான சுத்தத்தைப் பேணுதல் மற்றும் போதுமான ஆரோக்கிய வசதிகளை ஏற்பாடு செய்தலின் முக்கியத் துவம்.

### 6.4 பிள்ளைப் பராமரிப்பு நடைமுறைகள் தொடர்பாகப் பெற்றார் அறியச்செய்தல்

### 6.5 உளவியல், உள ஆற்றல், அறிவாற்றல், உளவியற் சமூக, மொழியாற்றல், அழகுணர்வு போன்ற அனைத்துப் பகுதிகளினதும் அதிக பட்ச அபிவிருத் திக்குப் பங்களிக்கும் விதத்தில் வயதுக்கேற்ற கற்றல் அனுபவங்களை ஒழுங்கமைத்தல்

1. ஆக்கத் திறன் விருத்தி
2. விளையாட்டின் மூலம் கற்றல்
   - பல்வேறு விதமான விளையாட்டுக்கள், அவற்றின் பயன்பாடும் முக்கியத் துவமும்
   - விளையாட்டு / கற்றல் மூலைகள்
3. ஒன்றிணைந்த கற்பித்தல், தொனிப் பொருட்கள் மற்றும் திட்டமிடல்
4. இயற்கைச் சுற்றாடலை அவதானித்தல்,துருவி ஆராய்தலும் பயன்படுத்தலும்
5. முன் வாசிப்பு, முன் எழுத்து, முன் எழுத்து சம்பந்தப்பட்டவையும் செவி மடுத்தல் திறன்களும்
6. கணித எண்ணக்கருக்களை முன்னெடுப்பதற்கான கற்றல் அனுபவங்கள்
7. கதைகள், நாடகம்,ஒத்திசைவு, தாள லயம், மற்றும் பாடல்
8. விளையாட்டு /கற்றல் சாதனங்கள் மற்றும் கற்பித்தல் சாதனங்களைத் தெரிவு செய்தல்
9. பின்னூட்டல் மற்றும் பொருத்தமான இடைத்தாக்கங்கள் மூலம் சாதித்தல், தன்னம்பிக்கை பற்றிய உணர்வை விருத்தி செய்தல்

## 6.6 பிள்ளை அபிவிருத்தி நிலையங்களுக்கான குறைந்த பட்ச நியமங்கள்

- கட்டிடங்கள்
- நீர் மற்றும் துப்புரவாக்கும் வசதிகள்
- உணவுகளுக்கு ஏற்பாடு செய்யும் வசதிகள்
- விளையாட்டு இடங்கள் - உள்ளரங்குகள், வெளியரங்குகள் மற்றும் சமூக ஒத்துழைப்பு
- தளபாடங்கள்
- நோயாளி அறைகள் / ஓய்வறைகள்
- கல்விச் சாதனங்கள்

## 6.7 பிள்ளை அபிவிருத்தி நிலைய முகாமைத்துவம்

- பிள்ளை அவதானிப்பு,கண்காணிப்பும் பதிவுகளை வைத்திருத்தலும்
- ஏனைய சேவை வழங்குநர்களுடன் தொடர்புகளைப் பேணுதல்
- பெற்றார் விழிப்புணர்வை வழங்குதலும், பெற்றார் மற்றும் சமூக ஒத்துழைப்பை அணி திரட்டலும்
- முகாமைத்துவக் குழுக்கள் மற்றும் பிள்ளை அபிவிருத்தி நிலையங்களைக் கண்காணித்து மதிப்பீடு செய்வதற்கான பொறிமுறைகளை அமைத்தல்
- பிள்ளை அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஆளுமை விருத்தி
- அடிப்படை ஆங்கிலம்
- பிள்ளை அபிவிருத்தி வள நிலையங்களுக்கு வருகை தருதல்
- உள்ளூரில் கிடைக்கக் கூடியதாயுள்ள வளங்களைப் பயன்படுத்திப் பிள்ளை அபிவிருத்திக் கற்றல் சாதனங்களை தயாரிப்பதற்கான குழு நிலை/வேலைப் பட்டறை அனுபவங்கள்
- அங்கீகரிக்கப்பட்ட மற்றும் சம்பந்தப்பட்ட பிள்ளை அபிவிருத்தி நிலைய மொன்றில் ஒரு மாதத்துக்கும் குறையாத நடைமுறை ரீதியான அனுபவம்

# 7. பிள்ளை அபிவிருத்தி நிலையங்களைப் பதிவு செய்வதற்கான செவ்வை பார்த்தல் பட்டியல்

*உங்கள் நிலையத்துக்குப் பொருத்தமான சகல காரணிகளுக்கும் எதிராக தயவு செய்து '√' அடையாளமிடவும்.*

## 7.1 பௌதிகச் சுற்றாடலும் வசதிகளும்

### *7.1.1* இட அமைவு

- இலகுவில் அணுகக் கூடியது.
- பிள்ளைகளுக்குப் பொருத்தமில்லாத ( மதுபானச் சாலைகள், மீன் மற்றும் இறைச்சிக் கடைகள் போன்ற) இடங்களுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ அப்பால் அமைந்திருத்தல்.
- பிள்ளைகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் (திறந்த கிணறுகள், குளங்கள் மற்றும் ஆபத்தான சாய்வுகள் போன்ற) இடங்களுக்கு அப்பால் பாதுகாப்பான தூரத்தில் அமைந்திருத்தல்.
- பிள்ளைகளின் ஆரோக்கியத்துக்கு ஏற்றதாக இருத்தல்.

### *7.1.2* வளவு

- வளவினைச் சுற்றியெங்கும் காப்பு வேலி / மதில் இருத்தல்.
- பிரதான வாயில் நன்கு பாதுகாக்கப்பட்டிருத்தல்.
- வளவானது துப்புறவாகவும் பற்றைகளோ புதர்களோ இல்லாதிருத்தல்.
- வெளியரங்க விளையாட்டுத் திடல் நிழலைக் கொண்டதாகவும் தட்டையாகவும் இருத்தல்.
- ஏறுதல், பாய்தல், சமநிலைப்படுத்தல், ஊஞ்சலாட்டம், ஊர்ந்து செல்லுதல் போன்ற செயற்பாடுகளுக்குப் போதுமான இடமும் உபகரணங்களும் இருத்தல்.

### *7.1.3* கட்டிட வளவானது துப்புறவாகவும் பற்றைகளோ புதர்களோ இல்லாதிருத்தல்

- அது நிரந்தரக் கட்டிடமாக இருத்தல்.
- ஒரு பிள்ளைக்கு கிடைக்கக் கூடிய குறைந்த பட்ச இடவசதி 20 சதுர அடியாக இருத்தல்.
- போதியளவு வெளிச்சமும் காற்றோட்டமும் இருத்தல். (கதவுகள் மற்றும் யன்னல் என்பனவற்றைக் கொண்டிருக்கும் மொத்த மதில் பகுதியின் பரப்பில் குறைந்த பட்சம் 1/7 பங்காக இருத்தல் வேண்டும்.)
- அரைச் சுவர்கள் குறைந்த பட்சம் ஒரு மீற்றர் உயரத்திலாவது இருத்தல்.
- மதில்கள் வண்ண மயமாக நிறந் தீட்டப்பட்ருத்தல்.
- கட்டிடம் நன்கு பேணப்பட்டிருத்தல்.
- கட்டிடம் பிள்ளை அபிவிருத்தி நிலைய செயற்பாடுகளுக்காக மட்டுமே பயன் படுத்தப் பட்டிருத்தல்.
- கட்டிடம் ஏனைய செயற்பாடுகளுக்கும் பயன்படுத்தப்படுவதாயின் பிள்ளை களின் விளையாட்டுச் சாதனங்களும் அவர்களின் ஆக்கங்களும் பாதிக்கப்பட லாகாது.

### *7.1.4* கிடைக்கக் கூடிய வசதிகள்

- பிள்ளைகளின் ஆக்கங்களை காட்சிப்படுத்துவதற்குப் போதுமான அளவு சுவர்ப் பிரதேசம்,காட்சிப் பலகைகள் மற்றும் அடுக்குகள்
- காரியாலய அறை
- களஞ்சியப் பொருட்களைக் களஞ்சியப் படுத்துவதற்கான களஞ்சியம்/அறை
- உணவைத் தயாரிப்பதற்கு ஏற்ற இடம் அல்லது சமையலறை
- நோயுற்ற ஒரு பிள்ளையை தங்கவைப்பதற்கு ஏற்றவாறு ஒதுக்கப்பட்டுள்ள ஒரு நோயாளி அறை அல்லது பாதுகாப்பான இடம்.
- பிள்ளைகளுக்கு ஏற்ற நீரடைப்பு மலசல கூடங்களும் அதற்குப் பயன்படுத் தும் நீரும். (25 பிள்ளைகளுக்கு ஒரு மலசல கூடம் என்றவாறு)

### *7.1.5* தளபாடங்கள், உபகரணங்கள் மற்றும் வசதிகள்

- பிள்ளைகளுக்குப் பொருத்தமான பாரமற்ற மரப் பலகையினால் தயாரிக்கப் பட்ட மேசைகளும் கதிரைகளும்
- ஆசிரியர்களுக்கான மேசைகளும் கதிரைகளும்
- ஆவணங்கள் வைப்பதற்கான சிற்றலுமாரி / அலுமாரி
- பிள்ளைகளுக்கான நன்கு பொருத்தப்பட்ட சுவர்க் கரும்பலகை
- பிள்ளைகளின் கண்மட்ட அளவில் வைக்கப்படும் கற்றல் பொருட்கள்/ விளையாட்டுச் சாதனங்களுக்கான அடுக்கு அலுமாரிகள்
- படங்களும் புத்தகங்களும் அவற்றைக் காட்சிப்படுத்துவதற்குரிய இடங்களும்
- பாய்களும் கனத்த துணிகளும்
- பிள்ளைகளின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்தும் வசதிகள்
- உணவைத் தயாரிப்பதற்கும் பரிமாறுவதற்கும் மூடுவதற்கும் பயன்படுத்தப் படும் உபகரணங்கள், நீரைக் களஞ்சியப்படுத்தும் கொள்கலன்கள்
- குடிநீரைக் கொதிக்க வைத்து களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகள்
- பிள்ளைகளின் நீர்ப் போத்தல்களையும் பைகளையும் வைப்பதற்கான அடுக்கு அலுமாரிகளும் கொளுவிகளும்.

*7.1.6* **ஆரோக்கிய வசதிகள்**

- நீர்க் குழாய் மூலமோ / கிணற்றிலிருந்தோ நீர் கிடைக்கக் கூடியதாயிருத்தல்
- மலசல கூடங்களில் போதுமானளவு நீர் வசதிகள் இருத்தல்
- குடிப்பதற்காக கொதித்து ஆறிய நீர் கிடைக்கக் கூடியதாயிருத்தல்
- உணவு உண்பதற்கு முன்னரோ அல்லது பிறகோ, வெளியரங்கத்தில் விளை யாடிய பின்னரோ அல்லது மலசலகூடத்தைப் பாவித்த பின்னரோ கைகளைக் கழுவுவதற்காக போதுமானளவு நீருடன் சவர்க்காரமும் வைக்கும் இடம்
- வழமையாகக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கான வழிவகை களும் இருத்தல்

## 7.2 சுகாதார பராமரிப்பும் போசாக்கும்

- சகல பிள்ளைகளிடத்தும் சுகாதாரம் தொடர்பான பழக்கங்கள் மனதில் பதியப்படுத்தப்படல்
- பிள்ளைகளின் துப்புறவு மற்றும் சுகாதாரம் தொடர்பாக அன்றாடம் கவனம் செலுத்தப்படல்.
- எந்நாளும் போசாக்குள்ள உணவு பரிமாறப்படல்
- போதிய மருந்துகளுடனான முதலுதவிப் பெட்டி கிடைக்கக் கூடியதாயிருத் தல்
- பிள்ளைகளின் சுகாதாரப் பதிவுகள் நன்கு பேணப்படுதல்

## 7.3 கற்றல் மற்றும் உளவியற் சமூக சுற்றாடல்

*7.3.1* **கற்றற் சூழல்**

- அவதானிப்பு மற்றும் துருவி ஆராயும் திறன்களை விருத்தி செய்வதற்கு ஏற்றவாறான இயற்கைச் சுவடுகளாகப் பயன்படுத்தக் கூடியவாறாக சூழல் அமைந்துள்ள வளவு அல்லது பிரதேசம் இருத்தல்
- தனிப்பட்டவாறாகவும் குழுக்களில் கலந்தும் பிள்ளைகள் பாதுகாப்பாக விளையாடுவதற்கு ஏற்றவாறு வெளியரங்குப் பிரதேசம் இருத்தல்
- போதுமானளவு வெளியரங்க விளையாட்டு உபகரணங்கள் (உதாரணமாக ஊஞ்சல்,ஏறுஞ் சட்டகங்கள், சுவர்கள் போன்றன)இருத்தல்
- மணல் மற்றும் நீர்விளையாட்டுப் பிரதேசங்களுக்கான ஏற்பாடுகள் இருத்தல்
- மணல் மற்றும் நீர் விளையாட்டுப் பிரதேசங்களுக்காக வித்தியாசமான அளவுகள், வடிவங்கள் மற்றும் கனவளவுப் பரிமாணம் கொண்ட கொள் கலன்கள் கிடைக்கக் கூடியதாயிருத்தல்
- பிள்ளைகளின் ஆக்கத் திறன், பொருத்தமாக்கிக் கொள்ளும் திறன், தானா கவே இயங்கும் திறன், வெளிப்படும் திறன் முதலானவற்றை வெளிக்கொண ரும் போதுமான உள்ளரங்க கற்றல் சாதனங்களும் அனுபவங்களும் இருத் தல்

**அங்கே இருப்பவை:**

- பழமையான ஆடைகளும் கண்ணாடியொன்றுமுள்ள உடைமாற்றும் மூலை
- விளையாட்டு வீடு
- சுற்றாடல் மூலை
- வரைதல் மூலையும் புத்தக மூலையும்
- ஏனைய கற்றல் மூலைகள்
- விசேட தேவைகளையுடைய பிள்ளைகளுக்குப் பொருத்தமான தூண்டுதல் களும் கற்றல் அனுபவங்களும்

*7.3.2* ***உளவியற் சமூக சுற்றாடல்***

- பெற்றாரும் பிள்ளைகளும் வருகையின் போதும் திரும்பிப் போகும் போதும் உள்ளன்புடன் உபசரிக்கப்படல்
- பிள்ளைகளின் அனுபவத்தை ஒட்டுமொத்தமான சூழலும் களிப்பு மற்றும்ஏற்றுக் கொள்ளல் உணர்வுடையதாக ஆக்குதல்
- பிரம்பு போன்ற காட்சிப்படுத்தல்களால் ஏற்படும் அச்சுறுத்தல்கள் முழுமை யாக இல்லாத சூழல்
- பிள்ளைகள் தாம் விரும்பும் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான சுதந்திரத்தை யும் வாய்ப்பையும் பிள்ளைகளுக்கு வழங்கல்.
- சுயமாக ஊக்குவிக்கப்பட்டு களிப்பான செயற்பாடுகளில் ஈடுபடுவதன் காரணத்தின் விளைவாக எழும் சுய கட்டுப்பாட்டை தூண்டுவித்தல்
- ஆடைகளையும் காலணிகளையும் அணிதல் போன்ற எளிமையான வேலை களை மேற்கொள்வதற்கு பிறரில் தங்கியிராது இருக்கவும் அத்துடன் தமது வேலைகளை விருப்பத்துடனும் களிப்புடனும் தாமாகவே செய்வதால் அடைந்துவிட்டோமென்ற உணர்வை விளைவாகப் பெறவும் உதவல்.
- பிள்ளையிலிருந்து - பிள்ளைக்கும், பராமரிப்பவரிலிருந்து - பிள்ளைக்கும் பெற்றாரிலிருந்து – பிள்ளைக்கும் ஆன உரையாடலை ஊக்குவித்தல்.
- பிள்ளைகள் ஒன்று சேர்ந்து விளையாடவும், ஒருவருக்கொருவர் உதவவும், வளங்களைப் பகிர்ந்து, கருத்துக்களையும் ஏனைய பிள்ளைகள் வெளிப்படுத்தும் தேவைகளையும் மதிக்கவும் தாராளமாக வாய்ப்புக்களை வழங்குதல்
- பிறருடன் உள்ளன்புடன் உரையாடவும் சமூகப் பண்பாடுகளைப் பின்பற்றவும் பிள்ளைகளை ஊக்குவித்தல்
- துப்புறவு, ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு போன்றவை தொடர்பான சிறந்த பழக்கங்கள், விழுமியங்கள், மற்றும் மனப்பாங்குகளை விருத்தி செய்வதற் காகவும் சிறந்த இடைத்தொடர்பாடல் உறவுகளை விருத்தி செய்வதற்காக வும் உணவருந்தும் வேளை போன்ற அன்றாட நிகழ்வுகளைப் பயன்படுத் தல்.
- உடைமை, உரிமை மற்றும் பரஸ்பரமான பொறுப்பு போன்ற உணர்வுகளைக் கட்டியெழுப்பல்

## 7.4 நிர்வாக நியமங்கள்

பின்வரும் ஆவணங்கள் கிடைக்கக் கூடியதாயிருத்தல்

- சேர்வு இடாப்பு
- பிள்ளைகளின் வரவு இடாப்பு
- ஆசிரியர்களுக்கான வரவு இடாப்பு
- பெற்றார் கூட்டங்களின் வரவுச் சமூகமளித்தல் பதிவேடு
- அவசரத் தேவைகளின் போது தொடர்பு கொள்ள வேண்டிய பாதுகாவலர்கள் / ஏனையோரின் முகவரி பதிவேடு
- ஆசிரியர்கள் / பராமரிப்போரின் தனிப்பட்ட விவரக் கோவை
- மாணவர் முன்னேற்ற அறிக்கை
- பொருள் இருப்புப் பதிவேடு
- சம்பவத் திரட்டுப் பதிவேடு
- நிதி அறிக்கைகள்
- தவணைகள் / வருடாந்த வேலைத் திட்டம்
- பெற்றார் - ஆசிரியர் கூட்டறிக்கைகள்
- முகாமைச் சபைக் கூட்டறிக்கைப் பதிவேடுகள்

## 7.5 சமயச் சுற்றாடல்

- பெற்றாரின் சம்மதத்துடன் சமய அனுஷ்டானங்களில் பங்குபற்றல் மேற்கொள் ளப்படல்
- சமய அனுஷ்டானங்களுக்காகப் பொருத்தமான இடம் ஒதுக்கப்பட்டிருத்தல்
- சமய விழாக்களை நினைவு கூறுவதற்காக விசேட வைபவங்கள் நடாத்தப்படல்

### 7.6 பணியாளர் தேவைகள்

*7.6.1 **பராமரிப்பாளர்களும் / ஆசிரியர்களும்***

- ஒவ்வொரு 20 பிள்ளைகளுக்கும் ஒரு பராமரிப்பாளர் / ஆசிரியர் இருத்தல்
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து பராமரிப்பாளர் / ஆசிரியர் வாண்மைத்துவப் பயிற்சியைப் பெற்றிருத்தல்
- பராமரிப்பாளர் / ஆசிரியர் சேவைக்காலப் பயிற்சியைப் பெற்றிருத்தல்

*7.6.2**பணி உதவியாளர்கள்***

பின்வருவனவற்றுக்கு உதவி இருத்தல்

- கட்டிடத்தினதும் வளவினதும் துப்புறவைப் பேணுதல்
- பிள்ளைகளின் துப்புறவுக்குப் பொறுப்பாக இருத்தல்
- உணவைத் தயாரித்தலும் உணவருந்திய பின் துப்புறவு செய்தலும்

### 7.7 பெற்றார் மற்றும் நிர்வாக ஒத்துழைப்பு

- முகாமைத்துவச் சபையொன்று இருத்தல்
- பெற்றார் - ஆசிரிய சங்கமொன்று இருத்தல்

### 7.8 வேலைத் திட்டம்

விருத்தி நிலையத்தின் செயற்பாடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருக்கும்:

- ஆரம்பிக்கும் செயல்முறை
- சமய வழிபாடுகள்
- வெளியரங்க விளையாட்டுக்கள்
- குறுங்கால இடைவேளை
- கட்டமைக்கப்பட்ட கற்றற் செயற்பாடுகளும் தொனிப் பொருட்களுடன் தொடர்பு உடைய ஆக்கபூர்வமான கருத்து வெளிப்பாடுகளும்(இவற்றுள் அவதானிப்பு, துருவி ஆராய்தல்,செவிமடுத்தல் மற்றும் தொடர்பாடல்: கருத்து வெளிப்பாட்டின் ஊடாக பேச்சு, சித்திரம், மாதிரியும் பாத்திரமேற்று நடித்தலும், முன் வாசிப்பு, முன் எழுத்து, முன் கணித செயற்பாடுகள்)
- உணவு நேரம்
- கற்றல் மூலைகளுடன் சம்பந்தப்பட்ட சுதந்திரமான விளையாட்டு நேரம்
- குழு விளையாட்டு / தனி விளையாட்டு
- இசை, பாடல் மற்றும் நாடகம் ஊடாக அழகியல் உணர்வை விருத்தி செய்தல்
- கதை சொல்லுதல்
- சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வு, அவதானிப்பு மற்றும் துருவி ஆராய்தலுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள்
- அடிப்படை சுகாதாரப் பழக்க வழக்கங்கள், சுயமாக உதவி செய்து கொள்ளும் செயற்பாடுகள்
- துப்புறவு
- நாளின் இறுதி நேர வாழ்த்துக்கள்

*(இப்பட்டியல் தனியொரு நாளின் செயற்பாடுகளையோ அல்லது செயற்பாடுகள் மேற் கொள்ளப்படும் குறிப்பிட்ட ஒரு ஒழுங்குவரிசையையோ சம்பந்தப்படுத்தாது என்பதைக் குறித்துக் கொள்ளவும்*

# பிள்ளை நேய அபிவிருத்தி நிலையங்கள்- உத்தேச செயற்பாட்டு கட்டமைப்பு

